ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண ஓடம்.

ஆறுகாண்டமும் அடங்கியுள்ளது.

இஃது

பாலகவி-கன்னிதாஸ ரவர்களால்

இயற்றப்பட்டது.

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

வெளியிடப்பெற்றது.

சென்னை.

1922

காப்பிரைட் ரிஜிஸ்டார்ட்] [இதன் விலை அணு

PRINTED AT THE
" ANANDA BODHINI " POWER PRESS,
VENKATESA MAISTRY STREET, SOWCARPET, MADRAS.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண ஓடம்.

பாயிரம்.

தெய்வ வணக்கமும் அவை யடக்கமும்.

பதம்.

சீர்கொண்ட ஆலிலைமேல்—மிக்க
தென்புடனே கண்வளரும்,
ஏர்கொண்ட ஸ்ரீராமன்-நல்ல
ஏலப்பதம் யான்பாட,
கார்கொண்ட கரிமுகவன் திவ்ய
கமலபதம் தொழுதிடுவேன்,
பேர்கொண்ட ஆழ்வார்கள்-என்னை
பேணியருள் செய்திடவே.

முடுகு.

பார்வதி யுடனுறை பரமனைப் பணிந்து
பாலவடி வேலனைக் கருத்தினி லணிந்து
வள்ளிதெய் வானை மலரடி துதித்து
மனமிருங் கமலமிசை வாணியை நினைந்து
சீதாபி ராம லட்சு மணரைப் புகழ்ந்து
திவ்யசட கோபனடி திருச்சிர மணிந்து
பன்னிரண் டாழ்வார்கள் பெருமையும் பாடிப்
பகரரிய தேவாதி முனிவரையும் நாடிச்
சிரஞ்சீவி யனுமந்தர் திருப்பாதம் வணங்கிச்

சிந்தைமகிழ் பாலகாண் டமுதற் ருெடங்கி
யுத்தகாண் டம் வரையிலாறுகாண் டத்தை
சித்தங் களித்தேலப் பதமாச் சுகத்தைப்
பெற்றிடச் சொல்லுவேன் புவிமீது தானே
பிழையொன்று மறியாத பிள்ளையாம் நானே
பஞ்சல க்ஷணமுள்ள முத்தமிழ் புராணம்
பலவேத ஞானமு மூணர்ந்தே நிதானப்
பேர்பெறும் நல்லகுண முற்றபெரி யோரே
பிழைபொறுத் தாட்கொள்ளும் புத்தியுடை யோரே
சந்திரனொளி வைக்கண்டு தானுமதைப் போல
தரணியிற் பிரகாசிப்போ மென்றெரு காலே
மின்மினி மினுக்குமதை யோசித்திருந் தாலும்
இன்னதென் றுணராத மூடரா னாலும்
மராமரா வெனமுத்தி யோர்கதை போலே
மைந்தனன் மிகவன்பு கொண்டுபுவி மேலே
ராமாரா மாவென்னும் ராமாய ணத்தை
நாயே னுணர்ந்துமுண ராமலே யவற்றைத்
தந்தேனே யேலபத மாகப்புவி மீது
தள்ளவும் போகாது காரணத்தாலே
தயவாய் மனம்பொறுத் தாட்கொள்ளு வீரே
சகலகலை யெல்லா முணர்ந்தபெரி யோரே
மணமுள்ள மல்லிகை மருக்கொழுந் துடனே
மணமில்லா வறுகையுஞ் சேர்த்தேயன் புடனே
மகாதேவர் பரமசிவஞ் சூடிக்கொள்ள விலையோ
மலருடனே கூடிநார் மணம்பெறவு மிலையோ
அதுபோல வென்றனை யகற்றியே விடாமல்
அன்புடன் மனம்பொறுத் தருளியிக ழாமல்
பாலகவி யாங்கன்னி தாசனை யாளும்

பக்ஷமாய்த் தாய்தந்தை நீங்களே கேளும்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ சீதாதேவிஜயம்

பாலகாண்டம்.

பதம்.

திருமருவும் ஸ்ரீராமன்-கஞ்ச
திருவடியை யான் தொழுது
கருணையுடன் கார்த்தருளும்-பால
காண்டமதை யுரைத்திடுவேன்
பெருமை பெரும் அயோத்திதனில்-வாழும்
பிரபல தசரதராஜன்
வரமருளும் பானுகுலன்-இந்த
மகிதலமுங்கொண்டாட

முடுகு

அருமைமனு நீதிதவ ருமலர சாக்ஷி
அறுபதா யிரவருஷஞ் செய்தாரே மாக்ஷி
இப்படி யிருந்ததச ரதராஜ னெடுநாள்
இப்புவியை யாண்டிருந் தானே யினி யெனையாள்
இகமான பரமுதவு பிள்ளையது காணே
னென்செய்வே னென்றெண்ணித் தசரதன் தானே
குலகுரு வசிஷ்டரொடு குறைசொல்லியிருந்தார்
கும்பகர்ணன்ராவ ணாதிகள் மிருந்தார்
செய்கின்ற வேதனை பொறுதந்த வானோர்
தியான மிகு மெஞ்ஞான முனிவர்முத லானோர்
தஞ்சமெனத் துதிசெய்யத் தேவர்களைப் பார்த்துத்
தயவாய் மகாவிஷ்ணு சொல்லுவார் காத்து:
அஞ்சவேண் டாமுங்கட் கருளது கொடுப்போம்

அடியோ டிராக்ஷதரை மாண்டிட வடிப்போம்
அரனுருத்திரன் அங்கதன் அனுமந்தன் சிலன்
அரக்கியுஞ் சேனைக்கு அதிபனும் நீலன்
சதுர்முகப் பிர்மாவும் ஜாம்புவனு மாக
தகைவுபே ரிந்திரன் வாலி பிள்ளை யாக
சங்கமும் சக்கரமும் சேஷனும் பரிவாய்
தம்பியர்க ளாய்வருக் நாமுமிக வன்பாய்த்
தசரதன் குறைபோகப் பிள்ளையாய் வருவோம்
சகலவர முங்கொடுத்தே பதவியுந் தருவோம்
தேவாதி தேவர்களே யெவருமிது முன்னம்
திசைதோறும் கவிகளாய்ச் சேருவீ ரென்ன
இவ்வகை யுணர்ந்துதலை கொண்டுமுனி பின்னே
அவ்வகையே யாம்புத்ர காமேஷ்டி தன்னை
அயோத்தியர சனைக்கொண்டு செய்வித்த போது
அருமறைகள் தேவாதி முனிவர்களு மோது
மேஷ்மா தம்நவமி கடகமிதுன லக்னம்
மிக்கமகிழ் கின்றபுனர் பூசநக்ஷத்ரம்
இந்தசுப கரமான மங்கள தினத்தில்
இகபரங் கொண்டாடக் கௌசலை வயிற்றில்
பரப்பிர்ம சொரூபமே ஸ்ரீராம னைகப்
பார்மிசை யவதாரஞ் செய்தாரே யோக
லட்சுமணன் சுபத்திரையுங் கண்டுகளி கூர
லட்சுமணன் சத்துருக்க னுகந்து மேசேர
யடிபுகழுங் கைகேசி மாதா வயிற்றில்
பரதனே விளங்கிவந் தார்சுப தினத்தில்
மைந்தரிவ் வாறுவர மனமது மகிழ்ந்து
மாமுனி வசிஷ்டனுல் மகிழ்பெற வுணர்ந்து
அந்தநா ளில்விஸ்வா மித்ரமுனி வந்தார்

அணிநக ரயோத்தியா ளரசனைக் கண்டார்
இந்நாளென துதவம் முடியவே வேணும்
இராமனை மகிழ்ந்துநீ தருகுவாய் காணும்
ஐயா மகாமுனியே யீதென்ன கொள்ளை
ஐயையோ முலையுண்ணு மறியாத பிள்ளை
தனையனுப் பிடமனது துணியாது கண்டாய்
தாடகையை யான்வந்து தரிப்பேனே துண்டாய்
இவ்வகை யுணர்ந்துமா முனிவன்சி னந்தான்
இராஜன் வசிஷ்டனால் மனமது துணிந்தான்
இராமனொடு லட்சுமணனைக் கூட்டிவிடை தந்தான்
மாமுனி யுணர்ந்துகரு முகிலொடு நடந்தான்
வழியில்வெயி லணுகாதே மந்திர முரைத்து
வந்தார்கள் வேள்வியில் மூவரு மதித்துக்
கொடியதா டகைவருக பாணந் தொடுத்துக்
கொன்றா னிரர்கவன் கூவிட வடித்து
உலகினில் சுவாகுவும் படையுடன் சாக
உடன் வந்த மாரீசன் கடலுண்டு போகப்
பெரிதான யாகத்தை அங்குநிறை வேற்றிப்
புண்ணியக வுசிகனிட முதற்றீர்த்த மேந்தி
பரப்பிர்ம கௌதம ரிருக்குமிட மேவி
பாததுளி யாலெழுந் தா ளகலியா தேவி
பெருமையா யெல்லோரு மிராகவனை நாடிப்
பேரான மிதிலா புரம்வந்து கூடி
அண்டபகி ரண்டங்க ளுண்டுமிழ் நாதன்
எண்டிசை களும்பரவும் புண்டரீக பாதன்
ஜனகரா ஜன்புத்ரி ஜானகியைக் கண்டான்
தசரத விராகவன் மிக்கமயல் கொண்டான்
கவுசிக மஹாமுனிவ ராலேரகு ராமன்

கீர்த்தியை யுணர்ந்துமகிழ் ஜெனகமஹா ராஜன்
போர்வில்லை யறுபத்து ஆயிரம் பேரால்
புவியங்க ணம்வருகச் செய்தாரே சீராய்
தனிபானு குலம்பிர காசிக்க வீர
ஜானகி கொணர்ந்துமய லெண்ணம்நிறை வேற
சந்தோஷ மாய்த்தேவர் முனிவர்களுங் காண
ஜனகனது வில்லதனை மிகவளைவு காணத்
தொடரெண்டு துண்டாக்கி விடவங்கு கண்டார்
சுவாமி ரகுராமனைத் துதித்தே மகிழ்ந்தார்
கௌசிக மகாமுனி முகூர்த்தநாட் கூறக்
கொண்டாடும் வைகுந்த மேயளி குபேர
அளகையெனு மிதிலையை யலங்கிரஞ்செய்தார்
அமரரெல் லாமிக்க மலர்மாரி பெய்தார்
தூதராற் கல்யாண நிருபங்கொ ணர்ந்து
சுபகர மகாராஜன் தசரதர் மகிழ்ந்து
மனைவியர் சமேதராய் வாத்திய முழங்க
வந்தார்கள் மந்திரிபிர தானிகள் வணங்க
மகிழும்ஐம் பத்தாறு தேசாதி தேசர்
மகுடம் நெருங்கவே ராஜாதி ராஜர்
அனைவர்களு மிதிலைநகர் வந்தே மகிழ்ந்தா
அரனரிய யன்முனிவ ரமரரு முவந்தார்
மாதாபி தாக்களை வணங்கிரகு ராமன்
மாதர்கள் மயங்கிவர சீதாபி ராமன்
தேரேறி மிதிலைநகர் வீதியில் மகிழ்ந்து
சுபமங்க ளானந்த மாய்ப்பவனி வந்து
கோமிதிலை ஜனகன்வர முன்னே யனேகர்
கோடானு கோடிமன் மதனிக் ராக
வேதமுத லண்டமும் தான்கோலங் கொண்டார்

விண்ணவரு மேத்திட மணக்கோலங் கொண்டார்
மன்னவருந் தசரதரும் மதிமந்திரி மாரும்
மகிமைபெறு முனிவர்கள் மறையவர்க ளெல்லாம்
மிக்கசுப கரமான மிதிலை நகர் தன்னில்
முக்கியகல் யாணவிதி செய்சுப தினத்தில்
தாளமத் தளவீணை நாகசுர மேளம்
தம்பூர்பிட் டீல்வீணை பம்பையெக் காளம்
வாத்தியமுப் பத்திரண்டு மாறு தொலிக்க
மண்ணுடர் விண்ணுட ரெவருந் துதிக்க
வல்லபை சமேதராய் ஆகுமிசை யேறி
வந்தரரே விக்கின பிரானட்பு கோரி
வள்ளிதெய் வானையொடு மயிலேறி வேலன்
வதுவையர சன்முன்னம் வந்தானே சீலன்
விடையேறி யுமையுடனே விமலனும் நேர்ந்தான்
வெள்ளையன் ன்மேறி வேதனுஞ் சார்ந்தான்
பூதானம் கோதானம் மிகுசொர்ன தானம்
பூசுரர்க ளுக்குமிரு பதினறு தானம்
பூரிதந் தேமிதிலை ஜனகன் களித்துப்
புண்ணிய குலகுரு வசிஷ்டனு மதித்துக்
கனமான முத்தான தண்டுலம் விரித்துக்
கலைமுறைச் சடங்கெலாம் கனிவாய் விதித்து
வேதவா க்கியஓம குண்டம் வளர்த்தி
வேண்டிய தெலாம்வேத விதியாய் நடத்தி
மாமுனி வசிஷ்டன் சமித்துகள் கொணர்ந்து
மங்கள முகூர்த்தவும் சவுஞ்செய மகிழ்ந்து
மரியாதை யுடன்வந்து ஜனகனுந் தாழ்ந்தான்
வனதேகி யைக்கன்னி காதான மீந்தான்
அருமையாய்ச் சீதைகை ராமன் பிடித்து

அழிவிலா மங்கிலியஞ் சூட்டிக் களித்து
அரசாணி கம்பவலம் வந்தே களித்து
அஷ்டலட்சுமிசீதை மலரடி யெடுத்து
அம்மிமிசை வைத்தே யருந்ததி பணிந்து
ஆனகலி யாணவிதி யெல்லா முடித்தான்
இவ்வகை முகூர்த்தவுற்சவஞ்செய்த பின்பு
அவ்வகையே தம்பியர் களுக்கு மிக வன்பு
கல்யாண மங்கள மகோற்சவஞ் செய்தார்
கனிவாகத் தெருவெங்கும் ஊர்க்கோலம் வந்தார்
மணமுள்ள மலர்மாரி வானவர்கள் பெய்தார்
மகிமைதவ மாமுனிவர் வாழ்த்துதல் புகழ்ந்தார்
காவலர்கள் பொன்மலர்கள் சொரிந்தார்கள் தாய்மார்.
கனமான நால்வரிசை பலவரிசை யீந்தார்
குணமுள்ள சுமங்கிலிகள் கூடியே வந்தார்
கும்பிட்டுச் சோபனம் பாடியே மகிழ்ந்தார்
தனிஜனக மஹராஜன் அருளும்விடை பெற்றுத்
தசரதன் மகனைமரு மகளையு மழைத்து
நால்வகைச் சேனையும் கடல்போலப் பொங்கி
நாகசுர தாளமே ளங்களு முழங்கிப்
பண்டிமிசை பணிந்துவரும் தேசாதி தேசம்
பயணம் புறப்பட்ட ராஜாதி ராஜர்
மங்கள கரத்துடன் அனைவருங் கூடி
வருகிறார் பொங்கியே யயோத்திநகர் நாடி
வரும்வழியில் அவசகுன காரணத் தாலே
மனிதர்க் கடிந்துஒரு மாமணியைப் போலே
சிரஞ்சீவி யாம்பரசு ராமனெதிர் வந்தான்
சிந்தைமிக பிரமித்து தசரதனே பயந்தான்
உலகமுண் டுமிழும்ரகு ராமன் களித்து

ஒருவரும் நிகரில்லை யெனவில் லெடுத்து
மனதிற் கடிந்துஒரு திரணமென மதித்து
வாதாடு மவனோடு சொல்வா னெடுத்துத்
திருவரசே ஆசீர்வா தம்ரகு ராமா
சிரஞ்சீவி நமஸ்காரம் மிகபரசு ராமா
பெண்களைக் கொலைசெய்ய லாமோரகு ராமா
பெற்றவளைக் கொலைசெயலா மோபரசு ராமா
சொத்தையாம் வில்லை யொடித்தாயே ராமா
துள்ளாதே யிந்தவில் வளைபரசு ராமா
இந்தா வளைத்தே னடாபரசு ராமா
என்றனைக் கடாக்ஷித்துக் காரும்ரகு ராமா
சந்திஜெப தபமெலாம் தந்தேனே ராமா
வந்தவழி பார்த்தோடிப் போபரசு ராமா
இன்னவகை சொன்னரா கவனைப் பணிந்து
இனிமா தவஞ்செய நடந்தான் மகிழ்ந்து
அன்னவன் கைக்கொண்ட வில்லைவரு ணன்பால்
அன்புட னடைக்கல மெனவைத்து மண்மேல்
மன்னவருந் தசரதரும் மதிமந்திரி மாரும்
மகிழ்தங்க ரதமொடு தம்பியர்க ளியாவும்
கூடவர ராகவனுந் தானும்ரத மேறிக்
கோகனக மலர்மாது கொண்டாட மீறிப்
பக்ஷமா யாவரு மயோத்திநகர் வந்தார்
பாலகவி யாங்கன்னி தாசனைப் புகழ்ந்தார்
திருமாது எங்கணும் விளங்கிக்குடி கொண்டாள்
திருவயோத் தியில்வந்து சேர்ந்துதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ சீதாதேவிஜெயம்

அயோத்தியாகாண்டம்

பதம்

முத்தரெல்லாங் கொண்டாடும்-ராம
மூர்த்திபதம் போற்றிசெய்து
சித்தமகி ழயோத்தியாகாண்டம்-நானே
செப்பிடுவே னருள்பெருக
பத்தினிஜா னகியுடனே-ராமர்
பாங்காக வாழ்நாளில்
சுத்துகடல் சூழ்புவிமேல்-பரதன்
கைகையின்பால் சென்றபின்பு.

முடுகு.

குலகுரு வசிஷ்டனொடு மந்திரிக ளிருக்கக்
கோதசர தன்மிக்க மனமது களிக்கப்
பிள்ளைக்கலி தீர்த்தரகு ராமனைப் பார்ததுப்
புவியாள முடிசூடச் சொல்லுவார் காத்து
மிக்கவறு பதினாயி ரவருஷ காலம்
மேதினியை யாண்டிருந் தேனிந்த்ர ஜாலம்
முடியாத மோகாந்த காமவி காரம்
முதுமையிலு மொழியா திருந்தென்ன சாரம்
பருவதமோ வென்றனது நீர்க்குமிழி தேகம்
பார்க்கவே ணுமுனது மகுடாபி ஷேகம்
பிள்ளைக்கலி தீர்த்திட்ட பெருமானே ராமா
பிரபலகுல கோதண்ட சீதாபி ராமா
மகிழ்வாக விந்தமனுத் தரவேண்டு மென்றான்
மகுடமய் ராமனை யிசையவே புகன்றான்
தேசாதி தேசமஹா ராஜாதி ராஜர்
தேரேறி யாவர்களும் வந்தா ரனேகர்

மாநக ரயோத்தியை வைகுந்த மென்ன
மங்கள வலங்காரஞ் செய்தார்கள் துன்ன
வானவர்கள் பூமாரி மகிழ் கொண்டு பெய்ய
மங்களா சிகள்கூறி மாதவர்க ளுய்யத்
தாளமத் தளவீணை தம்பூரு பாடச்
சங்கீத சரளிசுர மாதர்நட் மாட
சீதா சமேதனைய் ரகுராம னோது
ஜெகமான முடிசூடிக் கொள்கின்ற போது
காலனைப் போல விருந்தவொரு கூனி
கலகங்கள் செய்திடவே யெண்ணியவ மானி
ஆதியில் நடந்ததனைப் பகையாய் நினைந்து
அவசரமே கொண்டுகை கேசியிடம் வந்து
ஐயையோ கைகேயி யீதென்ன கொள்ளை
அவனிமுழு தாளவுமுன் சக்களத்தி பிள்ளை
ராமனே மகுடமுடி கொள்கின்றான் போடி
நாய்போ லிருக்ககெதி யாச்சுகுடி கேடி
பேயாண்டி பரதனுக் கென்னதா னுண்டு
பிச்சை யெடுத்திடவே யோடுதா னுண்டு
உத்தமா வன்னங்கள் பாலுண்ட நீரை
ஒன்றுரெண் டாக்குதல் போலுமாங் காரை
சித்திர விசித்ரமாய்ப் பழமொழி தொடுத்துக்
கொடும்பாவி கூனி குடியைக் கெடுத்துச்
சென்றபின் அய்யனொடு சொல்வா ளெடுத்துத்
திகைதப்பிக் கைகேசி மனமது திடித்து
கந்தபஞ் சணையில் கலைம்பா கலைத்துக்
கல்லுங் கரைந்துபோ மென்றே சினத்தால்
கைகேசி சண்டாளி புருஷனிடம் வந்து
கனமாகக் கோபித் திருந்தாள் விழுந்து

கண்ணாட்டி பத்தினியே கைகேசி மானே
காமரதி பைங்கிளியே கோமளமே தேனே
இத்தனை விதத்துயர மேதெனவே முன்னாள்
இயம்பிய வரங்கொடுத் தாற் சொல்வே னென்றாள்
அப்படியே தந்தேனே அட்டியில்லை பெண்ணே
அன்பாக வுன்துயரைச் சொல்லுவாய் கண்ணே
என்பிள்ளை பரத னிருந்துநா டாள
உன்பிள்ளை ராகவன் சென்றுகா டாள
இவ்வர மிரண்டுமெனக் கீந்தருள வேண்டும்
இல்லா விடிலுயிர் விடுவனென மீண்டும்
மரணவலி மூர்ச்சையாய் விழுவோர்கள் போல
மலைபோல் விழுந்தானே மன்னன்த ரைமேலே
ஒருவாறு மனமது தெளிந்தே யெழுந்தான்
உத்தமா பத்தினியைப் பார்த்தே யுரைப்பான்
உன்பிள்ளை யென்பிள்ளை யென்பது இரண்டோ
உலகத்தி லிப்படியுஞ் சொல்வாரு முண்டோ
ராமன் சிரேஷ்ட குமாரனா கையினால்
ராஜ்யமாண் டிடமகுடஞ் சூடுவா னதனால்
பரதவாழ் வானுக்கு நோக்கென்ன குற்றம்
பாக்கியமே வேண்டா மடியிந்தச் சித்தம்
உத்தமன் வனவாசஞ் சென்றதே யானால்
உடனேயென் னுயிர் விட்டுப் போகுமடி யுன்னால்
புருஷனைக் கொன்றபழி போகாதே மாதே
புண்ணியத் தாலியை யறுக்கத் தகாதே
சாஷ்டாங்க மாயுனது தனியடி பணிந்தேன்
தயவாய் மனம்பொறுத் தாளுநான் நொந்தேன்
இவ்வரந் தன்னில்வரம் வேறொன்று கேட்பாய்
இந்தவரந் தகாதுநீ யென்னுயிரைக் காப்பாய்

கண்டுமொழிந் தக்கணங் கருதிச்சா தித்துக்
கொண்டவளைக் கும்பிட்டுப் போற்றிவா தித்து
எத்தனை விதம்படித் தாலுமதை யெல்லாம்
எண்ணுமல் நீக்கின ளவள்மன துகல்லாம்
மாபாவி கைகேசி சண்டாளி மாது
மாயவன் மகுடமுடி கொள்கின்ற போது
வந்தென்ன சொல்லுவாள் தந்தைசொல் வாக்யம்
மகனேஎன் கண்மணியே கேட்பாய் சிலாக்யம்
பதினலு வருஷம் நீ சென்றுகா டாளப்
பரத னிருந்துமஞ் நீதிநா டாள
ஐயனுன் ஞேடென்னை அருள்செய்ய வென்ருர்
ஆதலா லிப்படிப் புகன்றேனே யென்ருள்
இராகவ னுணர்ந் தென து பாக்யமே பாக்யம்
எவர்களுக் குண்டிந்த தவநிலை சிலாக்யம்
தந்தைதான் சொலவில்லை தாய்சொன்ன சொல்லே
தாயே மிகத்தள்ள லாகுமோ பிள்ளை
சின்னவன் பெருஞ்செல்வம் யான்பெற்ற தன்ரே
இன்னமும் அயோத்தியி லிருக்கநா னன்ரே
இப்போதே வனவாசம் போகின்ற னம்மா
இதமான பரதனெடு வாழ்ந்திரு நீ சும்மா
அன்றலருங் கஞ்சமலர் போல்முக மலர்ந்து
அகமலர்ந் தேராம னன்னையிடம் வந்து
வனவாச மேகின்ற காரண முரைக்க
மனம்நொந்த மாதாவைத் தேற்றியே மிக்க
சிந்தமது கனிவாய்ச் சுமித்திரையிடம் வந்து
சிற்றடி வணங்கிட லட்சுமண னெழுந்து
இப்பேதே ராமா வுனக்குமுடி சூட்டி
இதமாள வைக்கிறேன் பரதனையே வாட்டி

இளையோன் மனஞ்சீறி யிப்படிப் புகன்றான்
இராகவன் சொல்லாலே கோபந் தணிந்தான்
மாதா கொடுத்திட்ட மரவுரி யெடுத்துச்
சீதாபி ராமலட் சுமணரு மகிழ்ந்து
மந்திரி சுமந்திரன் விடுக்கரத மேறி
வனவாச மேகின்ற பயணமாய்க் கோரி
தேவாதி முனிவர்கள் கலங்கித் துதிக்கத்
திருவயோத் தியிலுள்ள ஜெனங்கள் கொதிக்க
ஐய னிராகவன் ஆரண்யஞ் சென்றான்
அரசனோ டிக்கதையைக் குலகுரு புகன்றான்
கூரெரியில் வெண்ணெய்போ லகமது கரைந்து
கொதிக்கின்ற கொப்பறையிற் புழுப்போற் றுடித்து
ராமரா மாவென்று அழுதே வெதும்பி
இராஜ னயோத்தியிற் பல வாறாய்ப் புலம்பி
மன்னனாந் தசரதன் ஆவிவிட வப்பால்
வனஞ்சென்ற மூவருட கதைகேளு மிப்பால்
சீதா சமேதராய்க் கோதண்ட ராமன்
திறமையுள்ள லட்சுமண னுடனேரகு ராமன்
மனமது மகிழ்ந்துகங் காநதி யடைந்தார்
மகிமைதவ மாமுனிவ ருடனே கலந்தார்
நல்லகுண குகனவன் விடுதோணி யேறி
நதிதனைக் கடந்தார்கள் நட்புடனே மீறித்
தொண்டனாங் குகனவன் சுவாமியை யிருக்கத்
தெண்டஞ் சமர்ப்பித்து வேண்டினான் மிக்கப்
பணியுமிக வன்புள்ள குகனே நீ கேளாய்
பதினாலு வருஷத்தைப் பதினாலு நாளாய்
வனவாசஞ் செய்துயான் வருகுவேன் முன்பு
வந்தபின் னொருமித்து வாழலாம் பின்பு

அன்பாக விவ்வகை சொல் லியேபரத்து வாச
ரனுமதியி னுற்றம்பி சீதையுட னேக
இராமரு மேசித்ரக் கூடமே சார்ந்தார்
க்ஷேமாதி சயமெலாஞ் சென்றங்கு பார்த்தார்
மலர்போன்ற கரமதைச் சீதைமுன் னீட்டி
மணவளம் வனவளம் நலமெலாங் காட்டித்
தம்பிசெய் தருள்பர்ண சாலையிலிருந்து
சந்தோஷ மானார்கள் முனிவரு மகிழ்ந்து
இப்பாற் ஜெயம்பெருகுங் கேகய நாட்டில்
இனிதவ வசிஷ்டமுனி விடுமோலை யேட்டில்
எழுத்தறிந் துபரதன் மீண்டான் துடித்து
எழிலயோத் தியில்வந்து கண்ணீர் வடித்து
அரசேயென் னையனே யென்றன் பிதாவே
அருளே கடாக்ஷமே தேவர்கர்த் தாவே
இப்படி நீரெங்களைத் துறந்தே நடந்தாய்
இகமதனை விட்டுபர மாளவே தொடர்ந்தாய்
இவ்வாறு பலவாறு தந்தையை நினைந்து
ஏங்கிப்பர தனுஞ்சத் துருக்கனும் விழுந்து
அழுதண்ண னிராமனெங் கேயெங்கேயென்று
அன்னையிடமே சென்று கேட்டாரே யன்று
சண்டாளி கைகேசி சங்கதி யுரைக்கச்
சடலம் பதைக்கமிக வைதான் துடிக்கக்
கோபித்தும் பரதனுங் கோசலையைக் கண்டு
சேவித்துக் கைகட்டிச் செப்புவா னின்று
ஆவிக்கும் ஆவியாம் அண்ணனை வெறுத்தால்
அந்தரா மத்துரோக மனுவும் நினைத்தால்
பாவிகட்கும் பாவியாய் விடுவனே யென்று
பலவாறு சத்தியம் பண்ணினு னன்று

தனிசத்து ருக்கனும் பரதன் சகித்துத்
தந்தைக்குச் செய்கின்ற கடனைச்செய் வித்து
அன்பாகச் சேனுதி பதிகளு ராரும்
அன்னையும் வசிஷ்டமுனி சூழ்ந்தபெரி யோரும்
நானேயென் னண்ணனை யழைக்கிறே னென்றான்
நலமாக யாவர்களும் சூழவே சென்றான்
கங்கா நதித்துறை வடக்குக்கரை வந்தான்
கண்டுபர தன்மீது குகனேன் சினந்தான்
ஐயந் தெளிந்துதெரி சித்துப் பணிந்தான்
அன்புடன் பரதனுற் சங்கதியு ணர்ந்தான்
பரதரா ஜனுமிக்க நதியைக் கடந்து
பலகலை பரத்துவாசர் பாதம் பணிந்து
சித்ரக்கூ டத்துக்கு வருவதை யறிந்தான்
ஜெயவீர லட்சுமணன் சண்டையிடவவர்தான்
இராமலட் சுமணப் பெருமா ளடங்கி
இருக்கவே பரதனும் வந்தான் வணங்கித்
தந்தையிட சங்கதிலையக் கேட்டுத் துடித்தார்
தன்குரு வசிஷ்டனுல் மனமது தெளிந்தார்
நதிபடிந்தே தந்தை கடனுங் கழித்து
நல்லமன திளையோனைப் பார்த்துத் துக்கித்து
தலமதனை யாளுமுடி சூடாமற் றம்பி
சடைமுடி தரித்ததேன் சொல்லெனவும் வெம்பிப்
பண்பாக ராகவன் இப்படி யுரைக்கப்
பலபலெனக் கண்ணீர் சொரிந்திடவே மிக்க
மன்னவனைக் கொன்றன்னை வனமேகச் சொன்னுள்
மாபாவி கெற்பத்தில் வந்தேனே முன்னுள்
நானல்லோ மாதவஞ் செய்யவேணு மையா
நலநல்ல மாதவ முமக்குஇது மெய்யா

இப்போதே வந்துமுடி சூடுவா யண்ணே
என்றுபர தன்தொழுது பாடுவான் முன்னே
இவ்வண்ண மேசொல்ல விராகவ னுணர்ந்து
என்னசொல் வான்றனது தம்பியைப் புகழ்ந்து
தந்தைமொழி அன்னைமொழி தள்ளிவிட லாமோ
சத்திய மறந்துவினை கொண்டுபட லாமோ
எனைவரச் சொல்வது என்னவுன் மதியோ
என்வார்த்தை கேளா யெனதுகண் மணியே
தாய்சொற் றுறந்திடல் வாய்த்தசுக மேது
தம்பிநீ ஔவைமொழி யுணராயோ வீது
பதினாலு வருஷமும் நீக்கிவரு வேனே
பட்டாபி ஷேகமுடி யான்பெறுகு வேனே
இவ்வா றுரைத்துத்தன் மிதியடி கொடுத்தான்
இகமான பரதனுஞ் சம்மதி பிடித்தான்
அருள்செய்த மிதியடி யெடுத்துத்தலை சூடி
அணிநக ரயோத்தியில் வந்துபுகழ் பாடி
சுகுணமுள நந்தியின் கிராமமே யடுத்தான்
சுமந்திர னதிகாரஞ் செய்யவே களித்தான்
மிதியடி தனக்குமா மகுடந் தரித்தான்
மேதினியி லுள்ளவர்கள் பணியவே களித்தான்
பாங்குடனே தேவாதி முனிவர்கள் மகிழ்ந்தார்
பாலகவி யாங்கன்னி தாசனைப் புகழ்ந்தார்
சிந்தித்து யாவரும் மகிழ்ந்தே துதித்துச்
சித்ரக்கூ டந்தாண்டிச் சென்றுதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ சீதாதேவிஜெயம்

அயோத்தியாகாண்டம்-முற்றிற்று.

ஆரண்யகாண்டம்.

பதம்

புகலரியவனமதனில்-கல்லைப்
பெண்ணாகச்செய்த பதம்
அகமகிழ்வர் யான்தொழுது-நன்றாய்
ஆரணிய காண்டஞ்சொல்வேன்
ஜெகமகிழும் ஸ்ரீராமன்-திவ்ய
சித்ரக்கூடந் தன்னைவிட்டு
இகமதனிற் ஜானகியும்-தம்பி
இளையோனும் வந்திடவே.

முடுகு

வரும்வழியி லேதவ மாமுனியைக் கண்டு
மனமது மகிழ்ந்து வுற வாடியருள் கொண்டு
சிந்தைமகிழ மூவருந் தண்டகா ரண்யம்
சென்றதி லிருந்தார்க ளங்கேயொரு சல்யம்
சீதையை யெடுத்தே விராதன் நடக்க
ஜெயமகா லட்சுமணனும் ராமனு மடக்க
இருவரையு முடனே யெடுத்துமிகச் செல்ல
இருவரு மிவன்தோளை வெட்டியே கொல்ல
சாமிபா தந்தனது மேற்பட்ட தாலே
சகலஞா னங்களு முணர்ந்துபுவி மேலே
மூவருரு வாய்வந்த ராகவ பிரானை
முழுதுந் துதித்தவனு மேலேபோ னானே
விராதனவன் துதித்ததும் பெற்றது மகிழ்ந்து
விராட்சொரூப ராகவ னிருக்கமுன் வந்து
தண்டகா வனத்துமா முனிவர்களைப் பணிந்து
சண்டாள ராக்ஷதர் வதைப்பதை மொழிந்து
தஞ்சமென் மாமுனிவ ரெல்லா மடுத்தார்

அஞ்சா திருங்களென வபயங் கொடுத்தார்
பத்துவரு ஷம்தண்ட வனமதி லிருந்து
பண்பாக நீக்கியே வருகவே மகிழ்ந்து
எதிர்வரு மகஸ்தியமா முனிவனும் பணிந்து
ஏழையடி யார்களைக் காத்தருள் சுரந்து
பாவிக ளிராக்ஷதரை வேரோ டழிக்கத்
தேவாதி முனிவர்கள் படுந்துய ரொழிக்கத்
தம்பியுஞ் சானகியுந் தானுமகிழ் கொண்டு
தயவாக வேநல்ல பஞ்சவடி கண்டு
சீதாபி ராம ரிருந்தே களித்தார்
சேடனுர் மலர்பெய்ய மிகவருளளித்தார்
கொலையானை வரும்வழியைப் பார்க்கின்ற சிங்கக்
குட்டிபோ லிராக்ஷதர் வரும்வழி யொதுங்கக்
கண்ண னிராகவன் பார்த்தே யிருக்கக்
காலனாய் ராவண்ணன் குடியைக் கெடுக்க
நாசமது செய்யும்வகை சூர்ப்பனகை நங்கை
நன்மார்க்க மில்லாத ராவணன் றங்கை
வந்துரா மனைக்கண்டு மையலது கொண்டாள்
மயில்போல நின்றுகுயில் போலென்ன சொல்வாள்
சாஷ்டாங்க மாகவே காலில் விழுந்து
சரசசல் லாபசொல் லமுதம் பொழிந்து
அங்கஜ வலங்கிருதா ஆசைக்கண் ணாளா
அகமகிழ் லட்சுமண மருவுமண வாளா
கோலா கலத்துடன் மதனகொக் கோகம்
லீலாதி லீலைமத லீலைசை யோகஞ்
செய்கின்ற மதுரகுண யான்காம வல்லி
ஜெயபுருஷ ரத்தினமே அடியாளைப் புல்லி
அதரபா னச்சுவையி னமுதம் புகட்டி

ஆசைதீர்ந் திடவென்னைச் சேருவாய் கட்டி
சர்க்கரை கரும்புதேன் கசக்குமோ சுவாமி
தள்ளவேண் டாம்வலிய வந்தேனே காமி
விஷமதைப் புகட்டியுங் கேலிசெய்துக் காதே
வீடுவே கும்போது விண்ணெடுக் காதே
இவ்வாறு சூர்ப்பனகை யிடிகூரலி கூற
எம்பிரா னிராகவன் கேட்டுச் சினமேற்
குடிகேடி சண்டாளி நீர்மூடி நீலி
அடிபோடி வேண்டாங் தகாதிந்தச் சோலி
ஒருவன்றயி லேரெண்டு வாளோ பிசாசி
உன்னெண்ணம் நிறைவேற மாட்டாது சீசீ
அன்புள்ள தம்பிக்கு மனையாட்டி யில்லை
அங்குபோ விங்குவேண் டாமிந்தத் தொல்லை
கோபித்தி ராகவ னிப்படித் துரத்தக்
குடிகேடி சூர்ப்பனகை காமங்கொ ளுத்த
வீராதி வீரனிளை யோன்முன்னம் வந்தாள்
வேண்டியதெல் லாஞ்சொல்லிக் காலில் விழுந்தாள்
வந்தசூர்ப் பனகியிட வாதந் தெரிந்து
வாள்கொண்டே மூக்குமுலை காதையு மறுத்து
வஞ்சி யரக்கியடி நடவென வடித்தான்
பஞ்சிற்றீப் பொறிபோலே பறக்க விடுத்தான்
அகநொந்து சூர்ப்பனகி மூக்கையு மறுத்தும்
ஆசைக்கு வெட்கமில்லை யென்னவேண் டாது
எம்பிரான் ராகவ னிணையடி பணிந்து
என்னசொல் வாள் தனது மனமலர்ம லர்ந்து
இப்புவியி லங்கனஞ் சென்றதா லென்ன
இவ்விதம் நடத்தின னுனுமென்ன
சினமுள்ள விடந்தனி லாதார மிருக்கும்

சீதாபி ராமராற் சகலமும் நடக்கும்
சீதாபி ராட்டிக்கு இடையது கொஞ்சம்
ஜெகமீதி லென்றனக் கேநாசி கொஞ்சம்
ஆதலா லடியாளை யன்புடனே சேரும்
அன்னவ டனக்கு மெனக்குமிலை பேதம்
மூவரையும் முனையி லடித்துப் பிடிப்பேன்
மூவேழு கொண்டையெனக் கரமிசை முடிப்பேன்
கண்ணாள னேயென்னைக் கூடிக் கலந்து
காதலைத் தவிர்த்தெனை யாளென மொழிந்து
மூட்ட நினைந்தவர்க் கேதீர மென்று
முனிராக்ஷ சிசொல்லி வேண்டவவ ளன்று
சத்தியகுண ராமனிது வனுவுந் தகாது
சண்டாளி நடவென்று துரத்திவிட மாது
சூர்ப்பனகி பொல்லாத துரோகங் கொணர்ந்து
சூதுவா துகளெல்லா மெண்ணியே நடந்து
அறுபட்ட மூக்கையுங் காதையுங் காட்டி
ஐயகோ வென்றலறி யழுதுபகை மூட்டிச்
சீதாபி ராமனினை யோன்செய்தி கூறச்
சினமுடனே கேட்டுமதை யேமனுல கேறச்
சண்டையிட வந்தார்கள் கரதூஷ ணாதி
சங்கமாம் ரதகஜ துரகபதாதி
வந்தவர்கள் முன்னே யெதிர்க்கரகு ராமன்
மாய னமுதுண்ட கோதண்ட ராமன்
மனுவொன்று ஜானகியைத் தம்பி நீ காத்து
மனமது மகிழ்ந்திருப் பாய்சண்டைபார்த்து
இப்படி யுரைத்தரகு ராமன் கடிந்து
இயமனும் நடுங்கச் சரமாரி பொழிந்து
ஒருவரையும் வைக்காம லொருவனாய் நின்று

ஓர்முகூர்த் தந்தன்னில் வென்றானே கொன்று
மகிழாக மூவரு மிருந்தார்கள் பின்பு
மாபாவி சூர்ப்பனகி ராவணன் முன்பு
கல்லுமர மும்மழுக வழுதே வெதும்பிக்
காதையும் மூக்கையுங் காட்டிப் புலம்பி
அடியற்ற மரமென்னப் படிமேல் விழுந்தாள்
அன்புள்ள தங்கையே யுன்றனுக் கிந்த
மானபங் கஞ்செய்த மனிதனா ரென்ன
மாபாவி சொல்லுவாள் ராவணன் முன்னே
கண்டேவந் தேனென்னைக் காக்கின்ற வண்ணா
காட்டுகின் றேன்பஞ்ச வடியினை நண்ணா
விதரணர யோத்தியாள் தசரதன் பாலர்
வேரோட ரக்கரை யரிந்திடுங் காலர்
அண்டந்த மனிதராம் ராமலட்சு மணர்கள்
அவரவர்க் கவர்களே சரியிளங் குமாரர்
வர்ணிக்க வழகெலா மோருருக் கொண்டு
வந்திட்ட சீதையாம் ராமனிட பெண்டு
சுந்தரி அலங்காரி யவளிட சிவப்பு
தொட்டிட்டுக் கொள்ளலாந் தோணுமோ வெறுப்பு
உன்றனுக் கேற்றவ ளென்றே யெடுத்தே
னுடனேயென் மூக்குமுலை காதையுங் கொடுத்தேன்
இதனாலே வெண்கல ரதக்காரர் பத்து
சரிரெண் டாயிரவர் போனாரே செத்துப்
பெண்டாள வென்றனை யழைத்திட்ட காலை
கண்டித்து விட்டாரே கரதூ ஷணாளை
ஓடிச்சென் றண்ணாநீ சீதையை யெடுப்பா
யுத்தமி யவட்குநீ யுயிரைக் கொடுப்பாய்
கோடாலிக் காம்புதன் குலமதையே கொல்லும்

கூறிய பழமொழி யவளுக்குச் செல்லும்
குடிகேடி சூர்ப்பனகி யிவ்வா றுரைக்கக்
கேட்டந்த ராவணன் காமந் தரிக்கச்
சண்டாள மன்மதப் பேய்பிடித் தாடித்
தாயான சீதையை நினைந்துமனம் வாடிச்
சொல்லுவா னம்மானே யென்சொல்லைக் கேளாய்
துரிதமா ராகவன் மனைவியைத் தாராய்
என்னவே மாரீசன் மனம்நடு நடுங்கி
ஈனரா வணனுக்குச் சொல்வான் கலங்கி
பரதார மோகத்தைக் கொள்ளாதே பாவி
பரமாள வேமனைக் கின்றானே கூவி
கோதண்ட ராகவ னம்பிங்கே செல்லும்
குலமுடனே யுன்னையு மென்னையுங் கொல்லும்
ஆதலால் சீதையை நினையாதே மூடா
ஆவியைத் துறக்கவழி தேடாதே போடா
மாளா திருக்கவழி யிப்படி யுரைக்கக்
கேளாத தாலின்னஞ் சொல்லுவான் மிக்க
கோதண்ட ராமனால் மாளுவேன் முன்னே
குலமுடனே கிளையுடனே வருகுவாய் பின்னே
பட்டுவரும் ராவணா வுங்களுக் கங்கே
பார்த்துஇடம் வைக்கிறேன் வாவென்று இங்கே
பொன்மா னுருக்கொண்டு சீதைமுன் னின்றான்
புவிமீது ராமனைப் பிடித்துத்தா வென்றாள்
வர்ணமா னல்லவிது சொர்னமா னல்ல
மாயமா னென்று தம்பியே சொல்ல
விதிவசத் தாலதனை யுணராம லய்யன்
விதிமோச மாயதைத் தொடர்ந்தானே மெய்யன்
கபடமா னனது அகப்படா தோடக்

கண்ணன் கடிந்தொரு பாணமதைப் போட
லட்சுமணா லட்சுமணா வென்றங்கே கூவிப்
பட்டுப்போ னானந்த மாரீசன் பாவி
தாயான வைதேகி சாமிகுர லென்று
தம்பியைத் தெரிந்துவா போவெனவே யன்று
ஆரென் றிராகவனை யெண்ணினா யம்மா
ஐயனுக் கொருகுலைறவு மில்லையிரு சும்மா
குற்றமது நேர்ந்திடில் நமக்குத்தெரி யாதோ
தத்தளித் தண்டங்கள் சாய்ந்துபோ காதே
சுற்றுமோ சந்திராதி சூரியர்கள் விண்மேல்
சற்று மிருப்பாரோ ராக்ஷதர்கள் மண்மேல்
வேண்டாமி தென்ன கருத்துவிடு வாயே
ஆண்டவ னிப்போது வருகுவார் தாயே
பொல்லாத ராக்ஷதர்கள் செய்கின்ற சூது
பின்னிட்டுத் தெரியுமென் வார்த்தைதப் பாது
விபரீதம் வருமென்று லட்சுமண னுரைத்தான்
விதிவழியே மதிசென்று வைகுந்தி நொந்தாள்
ஐயனிட மன்னையால் லட்சுமணன் போக
அடியோடே ராக்ஷதர்கள் பட்டுஅத மாக
ஒண்டியாய் ஜானகி யிருப்பதைக் கண்டு
உடனே ராக்ஷதன் கபடவுருக் கொண்டு
தசகண்ட ராவணன் சன்யாசி யாகித்
தாயா ரிடஞ்சென்று நின்றானே துரோகி
கள்ளமறி யாள்சீதை மரியாதை செய்தாள்
கபடன் தகாததொரு வார்த்தையைப் புகன்றான்
அடடா தகாதகுண கபடசன் யாசி
அழியாது வந்தவழி போடா பிசாசி
யென்னவே ஜானகியை மண்ணோ டெடுத்து

ஏகினான் ராவணன் தேரிலே வைத்து
உடனே ஜடாயுவும் கண்டுகோபித்து
உத்தமியை விட்டுப்போ டாவென வெதிர்த்துச்
சண்டையிட மூடன் ஜடாயுவைச் செயித்துத்
தாண்டிச்சென் றேயந்த லங்கையி லொளித்து
அம்மனைய சோகவனச் சிறையினில் வைத்தான்
அரிராம னும்ஜீவ னஞ்செய்தி ருந்தான்
முன்போன ராகவன் தம்பியைக் கண்டான்
முக்கியமாய்ச் சங்கதிகள் யாவுந் தெரிந்தான்
வந்துசீ தையைப்பர்ன சாலையிற் காணான்
மனநொந் திராகவன் முழுதுது ய ரானன்
தம்பியுட னேயந்த வன்மெலாந் தேடித்
தத்தளித் தேவரும் வழிதனில் வாடி
மண்மேலே விழுந்திட்ட ஜடாயுவைக் கண்டான்
மலைபோல் மேல்விழுந் தழுது புரண்டான்
கண்ணனைத் தேற்றியே ஜடாயுவுந் தானே
காரண முரைத்துநற் கதியேகி னானே
மாதா பிதாவென ஜடாயுவைக் கொள்ளி
வைத்துவிதி செய்தானே பாற்கடற் பள்ளி
இளையவன் தண்ணீர்கொண் டுவரப் போக
எமனென வழிதொழுகி யர்க்கியெதி ர்ாகக்
கோபித்து லட்சுமணர் மூக்கையு மறுத்தார்
கொடுமையுள ராக்ஷதர் வந்தே யெதிர்த்தார்
தம்பியுட னேயனு மவன்கையிற் சிக்கித்
தந்திரமாய் மீண்டபின் றள்ளியே மடக்கிக்
கண்டித்துக் கொல்லவே ஞானம் பிறந்து
விண்டலத் தேதிவ்ய வடிவாய்ச் சமைந்து
பரப்பிர்ம்ம ராமனைத் துதித்தே பணிந்து

பரமகெதி பெற்றான் கவந்தனு மகிழ்ந்து
தம்பியுடன் ராகவன் சவரியிட மேகிச்
சகலவுப சாரமுங் கொண்டுவெளி வாகி
பக்ஷமாய் சவுரிக்கு முத்திவரந் தந்தார்
பாலகவி யாங்கன்னி தாசனை யுகந்தார்
சதுர்மறை துதிக்குநல் ராஜர்கள் வணங்க
சவ்ரிக்குக் கிருபைசெய்து செல்லுதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஸ்ரீ ராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ சீதாதேவிஜெயம்.

ஆரண்யகாண்டம் முற்றிற்று.

கிஷ்கிந்தா காண்டம்.

பதம்.

நாற்றிசையும் போற்றிசெய்யும்—வேத
நாரணனார் மலர்ப்பதத்தைக்
கீர்த்தியுடன் தோத்தரித்து-நானே
கிஷ்கிந்தாகாண்டஞ் சொல்வேன்
வாழ்த்திடுவேன் சவுரி சொல்லால்-ராமர்
வழிகொண்டு தாண்டக்க
ஏற்றகுண சுக்ரீபன்-கண்டு
ஏகிடவேவாயுமகன்

முடுகு.

கவனமொடு மவரவர் கருதியே பார்த்தார்
கதிரோனைக் கண்டமலர் போல்முகம் பூத்தார்
தவவடிவர் வருசிலையர் தர்ம்மகுண சீலர்
இவர்யாவ ரோவென் றனுமந்தர் கேளார்
பிராணசஞ் சீவிபோல் பொருள்தனை விடுத்தார்

திராணியா லதைத்தேடி யெல்லா முடித்தார்
இவர்கள் பரி தாபங்க ளெல்லா முணர்ந்து
இயம்புபுலி கரடியு மிரங்குமே மகிழ்ந்து
மாசகலே இவ்வண்ண மெண்ணியே சொன்னர்
வன்னிவடி வாகியவர் முன்னமே நின்றார்
ஆரடா வென்றய்ய னைக்கியா பித்தார்
அடியனு னனுமந்த னென்றே யுரைத்தார்
பெருமலையின் வாலியின் துஷ்டப் பகை யாலே
பேதைபோல் சுக்ரீபர் பணிந்துமண் மேலே
ஆசைகலே நொந்தே யொழித்தவ னிருப்பான்
அறிந்துவர வென்னைவிட் டானதை யுரைப்பேன்
தன்சொந்த புவியையும் தாரத்தை விண்டு
தவிக்கிருன் செடியிற் கோடிபோல் துவண்டு
மலையற்று முயிரிலே தொங்கும்வே ளையிலே
வந்தீரே யெங்கள்பல னிந்தநா ளையிலே
புகழ்தாச சுக்ரீப ரெங்கையவ ரென்றார்
பேர்சொன்ன போதே பிழைத்தோமே யென்றார்
தம்பியால் சாமிகதை யெல்லா முணர்ந்து
தனிவிஸ்வ ரூபத்தைக் காட்டிப் பணிந்து
விடைகொண்டு அனுமந்தன் வேந்தனிடம் வந்தான்
விசனமாய்ச் சாமிகதை விண்டுவருள் தந்தான்
அக்கணஞ் சுக்ரீவ னேயனே யடுத்தான்
மிக்கயான் காக்கிறே னென்றருள் கொடுத்தான்
மாபாவி வாலியைக் கொன்றிடத் தானே
மராமர மேழுருவ வாளிதொடுத் தாரே
சனிவழியில் துந்துமி யெனும்பதனைக் கண்டார்
தம்பியா லதனைக் கிளப்பியே விட்டார்.
என்றனுட ஜானகி யெறிந்தவா பரணம்

கண்டவுட னென்னுயிர் கருவிதனில் மரணம்
தேடிக்கொள் ளாம லிருந்தென்ன செய்வேன்
தீயகுண ர்ாக்ஷதன் குலமெலாங் கொய்வேன்
சொந்தமனே யாளைக் கொடுத்துமே நின்றேன்
சுவையுள கரும்பினில் வெறும்புஷ்ப மானேன்
ஐயனும் இவ்வாறு அழுது புரண்டார்
அன்புள்ள சுக்ரீப னண்டையிலே வந்தான்
ஏதுக்கே யித்துயர மென்றே யெழுந்தான்
இக்ஷணஞ் சீதையைத் தருவேனே யென்றான்
சுக்ரீபன் றானுஞ் சுவாமியைத் தேற்றச்
சுகுணமுள தம்பியொடு வாலிவெகு சீற்ற
சண்டையிட ராகவன் தன்னம்பை யெய்தான்
சண்டாள னவனியில் வீழ்ந்துதுதி செய்தான்
வேண்டிய வரங்களை வணங்கியே பெற்றான்
மகனுடனே தம்பியும் வாழவே வகுத்தான்
மாயவ னிராகவன் பாலளித் திட்டு
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை விட்டு
மனம்நொந்து பட்டானே வாலிமா பாவி
மனையாட்டி தாரையு மழுதாளே கூவி
சாஷ்டாங்க மங்கதன் சாமிவாள் கொண்டான்
தம்பியால் தன்துயரம் யாவையும் விண்டான்
அன்புடனே சுக்ரீபன் மகுடம் புனைந்தான்
அம்புவி புரக்குநெறி ராகவ னளித்தான்
மழைகாலஞ் சென்றிருந் தங்குமுனி மலைமேல்
மண்மலர் மலர்ந்தே யிருந்தார்கள் மண்மேல்
ஆணாகிப் பெண்ணாகி யலியாகி யெங்கும்
தானாகி நின்றருளும் ர்மனிலங்கும்
அம்புவியிற் ஜானகி யகன்றதை நினைந்து

அக்கினியில் மெழுகுபோ லகமது கரைந்து
காமாக்கினி யாலே களைத்தே விழுந்தார்
கல்லுங் கரைந்திடுக வேயழுது நொந்தார்
எம்பிரான் துயரமதை பிளையோ னறிந்து
ஈதென்ன கோலமெனச் சொல்லுவான் பணிந்து
அவனியுள் ளோர்க்கெலா மாதார ராமா
கவலைகொண் டிப்படிக் கலங்கிடுத லாமா
ஐயனே யுனைப்போற் சமானம்வே றேதோ
ஐயவுன் கோதண்ட மொன்றுபோ தாதோ
ஆடேது கடிக்குமென் றறியேறி நாடு
அழகுபோம் ராக்ஷ தருக்கென்ன வீடு
பலவீர னனுமனது பலமுமறி யாயோ
பகர்வேத முடிவே நீ யிதனையுண ராயோ
உன்மகிமை யறியாம லுருகிறு யிங்கே
பிரம்மாதி தேவர்க்கும் வாழ்வினி யெங்கே
உணர்வேத தருமங்கள் பொய்க்குமோ கானும்
உட்கார்ந்து கொண்டல்லோ சயனிக்க வேண்டும்
ஆக்கப் பொறுத்தவர்க ளாரப் பொறுக்க
அவசரப் படுகுவது சரியோ சகிக்க
நித்யகுண சுபமங்க ளனந்தகுண சாமி
நினைவுநீ கலங்கினல் நிற்குமோ பூமி
சொன்னேன் குறைவில்லை சுகமேயினி மீதே
சுவாமியென் னன்னைவர லாச்சுதிப் போதே
மகிமைபெறு மிளையோனு மிந்தவகை சொல்ல
மனமது தெளிந்தாராம் ராவணனை வெல்ல
மழைகாலஞ் சென்றவுடன் வருவேனே யென்று
மன்னவன் சுக்ரீபன் போனனே யன்று
வருவானே வாரானே வன்மன தறிந்து

வாவென்ன விளையோன் சென்றனே விரைந்து
அனுமந்தர் தாரைக்கு மருள்மொழி படித்து
அவனியிற் கபிகளை வணங்கிட வடித்துக்
காவலுடன் கிஷ்கிந்தை சென்றுகண் டானே
கடைகெட்ட மதுவுண்டு பாவியாய் நானே
புத்திகெட் டேனென்று சுக்ரீபர் சொன்னார்
புவியிலிளை யோன்வந்த காரிய முடிப்பார்
அக்கணஞ் சுக்ரீவ னையனிடம் வந்தான்
அருள்பெற்றுக் கமலபத மேத்தியே மகிழ்ந்தான்
மிக்கான கபியேழு பத்துவெள் ளந்தான்
வீரரையு மெம்பிரான் கண்டே மகிழ்ந்தான்
சுக்ரீபர் தெற்கான வழிசொல்லி ராமர்
சீதையுரு சொல்லித்தா வனுமந்த ராமன்
மோதிரம் பெற்றுமலை நாடுகள் கடந்தார்
மிக்கசம் பாதியின் சொல்லால் மகிழ்ந்தார்
கைக்கான திவ்விய மயேந்திரமு முற்றான்
கண்டுபணி ஜாம்புவன் துதிசெய்யப் பெற்றான்
படிமீது எங்கணும் போற்றிடச் சிறந்தான்
பாலகவி யாங்கன்னி தாசனை யுகந்தார்
வானவர்கள் பூமழை பெய்யவே யிப்பால்
மதங்கமுனி மலைவனம் வந்திதையாகப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-சீதாதேவிஜெயம்

கிஷ்கிந்தாகாண்டம் முற்றிற்று.

சுந்தரகாண்டம்.

பதம்.

இகபபரமு மிலகிவிடும்-ராம
னிணையடியை யான்றொழுது
சுகமுறவே சிரஞ்சூடி-திவ்ய
சுந்தரகாண்டஞ்சொல்வேன்
துகளங்க மிலாவனுமன்-விஸ்வ
சொரூபமதைத் தானெடுத்து
அகமகிழ்வாய் மயேந்த்ரமிசை
அதிவிரைவாய்ப் பாய்ந்தனனே.

முடுகு.

கரடிபுலி யாளிகள் சிம்மங்க ளோடக்
கண்டுமுனி வோரமரர் கொண்டுதுதி பாட
அனுமந்தர் விஸ்வரூ பத்தொடு குதித்தார்
அன்புடனே வார்த்தைமை நாகர் குறித்தார்
கொடிகோண தாரையைக் கொன்றே சரித்தார்
கிடுகிடென மாநக ரிலங்கையிற் குதித்தார்
பத்துத்தலை ராவணன் வடவாசற் காரி
பாதகி யிலங்கணி பதறியே சீறி
ஆரடா வென்றே யதட்டியே வந்தாள்
ஆஞ்சநே யர்கையா லறைகொண்டு நொந்தாள்
ஆதியில் நான்முக னமைத்தபடி யின்று
ஆச்சுதென் கெதியெனப் பட்டாள் புகன்று
இராவணன் சேனைக்கு முன்காவு தந்தார்
இராமானு ஜம்பதம் பாடியே நடந்தார்
சீதா பிராட்டியைத் தேடியே வெகுண்டார்
தீயனன் னசோகவனத் தோட்டத்தைக் கண்டார்
அனுமந்தர் மரமேறி யவ்விட மிருந்தார்

அடியோ டிலங்கையை யெடுப்பேனே யென்றார்
அரக்கியர் கூட்டத்து நடுவிலே தானே
அகமது மகிழ்ந்தெங்க ளையனனு மானே
தாயான சீதா பிராட்டியைக் கண்டார்
சாமிகா ரியமினி ஜெயமென மகிழ்ந்தார்
சிந்தைநொந் தேஜானகி துக்கித்து நின்றாள்
சிறைநீங்கிச் சாமிமுகங் காண்பேனோ வென்றாள்
அண்டரண் டங்க ளிடிந்துபோ னாலும்
அம்புவி யெல்லாங்கீழ் மேலதா னாலும்
உலக மாதாவுக்குக் குறைவருவ துண்டே
உன்மனங் கோணுவது மென்னபிழை கண்டோ
சாமிவிடு தூதுவன் வருகுவா ரிப்போ
ஜானகி மனக்கவலை நீங்கிடுந் தப்போ
இளையோ டிராவணன் பட்டிடத் தானே
கனவுகண் டேனது தப்பாது மானே
அஞ்சவேண் டாமெனத் திருச்சடை பணிந்தாள்
அம்மனு மவ்வாறு அகமது துணிந்தாள்
அதுகாலம் ராவணன் ஆனந்த மாக
அம்மனிடம் வந்தா னழிந்துமே போக
சொர்ன்னமே தங்கமே சொகுசுள்ள மானே
அன்னமே செல்வமே யருங்கிளியே தேனே
அங்கஜன் கணையாலே நொந்துயான் வந்தேன்
ஆலைக் கரும்புபோற் சிக்கியனம் நொந்தேன்
சாஷ்டாங்க தெண்டஞ் சமர்ப்பித்தே னானே
தயவாக மனதுவைத் தாளெனது மானே
சண்டாள மாபாவி ராவணன் தானே
சற்றும்விதி யறியாம லங்கேயழு தானே
தாயான வைதேகி செவியிரண்டு மூடித்

தணலென்று அறியாமல் வந்தாயே நாடி
விளக்கினிற் பூச்சிபோல் மடியாதே பாவி
வீழாதே நரகத் திராவணத் துரோகி
கற்றாணைச் செல்லது அரிக்குமோ மூடா
கற்றவித்தை காட்டாதே தாயண்டை போடா
அக்கினி கொளுத்திச்செய் திட்டதவ மெல்லாம்
ஆற்றிற் கரைத்தபுளி யாச்சுதே புல்லா
இன்னவகை ஜானகி யெடுத்தே யுரைத்தாள்
இடிகொண்ட ராவணன் தன்மனை புகுந்தான்
ஆவிவிட வைதேகி யக்ஷணம் நினைந்தாள்
அதுகால மனுமந்த ரம்மனைப் பணிந்து
மாயவ னிராகவன் விடுதூத னானே
வாயுமக னென்னும் வள்ளலனு மானே
சதகோடி மீலாவி காந்திப்பிர காசர்
ஜயராம சுந்தர விலக்கண விலாசர்
சுலக்ஷண வலங்கிருத சவுந்தர்ய மெல்லாம்
சுபமா யுரைத்தா ரிதுநல்ல சொல்லாம்
பக்ஷமாய்ச் சுவாமிதிரு வாழியைத் தந்தார்
பசித்தவர்க் கமுதங் கிடைத்ததெனக் கொண்டாள்
பிறவியந் தகனுக்குக் கண்கிடைத் ததுபோல்
பெருமலடி புவிமீதிற் பிள்ளைப்பெற் றதுபோல்
திருமாது பலவாறு யெண்ணிக்குறை விண்டாள்
பெருமையாய் முத்தமிட் டேயக மகிழ்ந்தாள்
நான்பிரிந் தேயிங்கு வந்தநாள் முதலாய்
நடந்தகதை சொல்லென நவின்றாரே மகிழ்வாய்
விஸ்வரூ பந்தன்னைக் காட்டிட மகிழ்ந்தாள் .
வேண்டிய வரங்கொடுத் தனுமனைப் புகழ்ந்தான்
தன்மனதி லுள்ளபடி யெண்ணிப் படித்தான்

ஜானகி மகிழ்ந்தருசூ டாமணி கொடுத்தாள்
மணிகொண்டு வைதேகி மலரடி பணிந்தான்
மாபாவி ராவணன் படும்வகை யுரைத்தான்
விடைகொண்டு வழிகொண் டரக்கரை யழித்தார்
வேருட னசோகவனம் விழுந்திட வழித்தார்
அதுகண்டெ வெண்பதா யிரஞ்சூரர் வந்தார்
அழுகவெற் றிலையெனக் கிழித்தே யெறிந்தார்
அக்கணங் கோல்ஜம்பு மாலியெதிர் நின்றார்
அனுமந்த னடியினு லெமபுரஞ் சென்றான்
துரிதமொடு பஞ்சசே னதிபதிகள் வந்தார்
தோரண கம்பத்தி லடியுண் டிறந்தார்
இதுசேதி யாவற்றும் ராவண னறிந்தே
ஏவினு னக்ஷதனைப் படையொடு சினந்தே
காவலர்கள் பனிரெண்டு ஆயிரம் பேரும்
கனமான நாலுல க்ஷங்காளை மாரும்
கூட்வர வக்ஷதன் கோபித்து வந்தான்
கோவிந்தர் தூதுவன் கண்டே வதைத்தான்
அம்புவியி லக்ஷதன் படையோடு பட்டான்
அப்பனுரை நம்பியெம லோகம் பிடித்தான்
அக்ஷணஞ் சேனைநாற் பதுவெள்ள முடனே
ஆச்சரித் திந்திர ஜித்தன்வந் தானே
ஆஞ்சநேயர் கண்டு சினமுட னெதிர்த்தார்
அத்தனை படைகளையு மதமாக்கி விட்டார்
என்னசெய் வேனென மனக்கவலை கொண்டான்
இந்திரஜித் துமறு படியுந் தெளிந்தான்
மனதிற் கடிந்துபிரம் மாஸ்திர மெடுத்தான்
மந்திர முரைத்தவனு மான்மேல் விடுத்தான்
காரணத் தாலே கட்டுப்பட லானேன்

கடினமுக ராவணன் கொலுமுகம் போனான்
ஆரடா குட்டிக் குரங்கேநீ யென்றான்
அடாகேளடா ராம தூதனா னென்றான்
மூவரு முருக்கொண்டு ஸ்ரீராம னாக
மூவுலகில் வந்தாரே தேவர்சிறை போக
அண்டமெல் லாம்பெற்ற ளன்னைசீ தையடா
அவள்மனம் நொந்தா லிருப்பாயோ மூடா
உன்னரசுஞ் செல்வமும் வேண்டிய திருந்தா
லன்னைஜா னகியைவிடு இப்போது என்பால்
தீபத்தை யேற்றிக் கிணற்றில் விழாதே
செப்பிட்ட நூல்வழி மறந்து கெடாதே
அனுமந்த னிவ்வாறு நீதிச் சொல் படித்தான்
அதுகேட் டிராவண னகமே துடிப்பான்
ஆஞ்சநேய னைக்கொல்ல வரக்கன் றுணிந்தான்
அவன்தம்பி சொல்லாற் கோபந் தணிந்தான்
வம்புபடு ஆடைகளைக் கொண்டேயனு மந்தன்
வாலிலே சுற்றியே விட்டா ரரக்கன்
அதுதெரிந் தெனதன்னை ஜானகி களிப்பாய்
அனுமானை மாத்திரஞ் சுடாம லிருப்பாய்
என்றக்கினி பகவானை வேண்டித் துதித்தாள்
இன்பமாய்ப் பொன்பொரிபோ லென்னவே யிருந்தாள்
வெற்றிப்பெண் ஜானகி வசிக்குமர மொன்றும்
விட்டந்த ராவண னிலங்கைநக ரெங்கும்
தன்வாலை யனுமந்தன் விட்டே வளைத்தான்
சங்கர் வுருத்திரன் போலே யெரித்தான்
ஆடரங் கஞ்சாலை சோலைகளுங் காடும்
அரசிருப் புந்திண்ணை யுப்பரிக்கை வீடும்
கோபுரமு மதில்களுஞ் சப்ரக்கூ டங்கள்

கொத்தளஞ் சாவடி தொழுவமா டங்கள்
சகலமு மொன்றாகச் சேர்ந்தெரியு திங்கே
சகலமுனி தேவர்க்குங் கொண்டாட்ட மங்கே
இலங்கைநகர் நீறா யெரிந்ததை மகிழ்ந்தா
ரெனதன்னை வைதேகி யுள்ளங் குளிர்ந்தாள்
அனுமானு மைநாகந் தன்னையே கண்டான்
அங்கஜன் சேனையை வணங்கியே கொண்டான்
மாருதியு மங்கதனுஞ் சேனையும் நடந்தார்
மாசுக்கி ரீபன் வனத்திற் புகுந்தான்
அதிலுள்ள முக்கனியொ டுங்கனிக ளுண்டார்
அங்ஙனம் யாவரும் ஆனந்தங் கொண்டார்
இந்திரன் வாலிக்கு இட்டதோட் டந்தான்
இதிலேசுக் ரீபருக் கினியநாட் டந்தான்
அவ்வேளை பத்திமுக னகமா யெதிர்க்க
அங்கத னடித்தானே யவனுயிர் பதைக்க
இப்புர மெம்பிரா னிராமானு ஜன்தா
னினிச்சீதை வருவாளோ வென்றே நினைந்தான்
திக்கெங்குஞ் சீதையைத் தேடிநொந் தானே
திக்கிலுங் காணாமல் வாடிவந் தானே
அண்டமெல் லாந்தேடி யப்புரம்போ னானே
எங்கணுங் காணா திளைக்கலா னானே
எனதுமயில் ஜானகி யிறந்துவிட் டாளோ
வெனைமாத்தி ரமிங்கு விருக்கவைத் தாளோ
சுபவார்த்தை அனுமந்தன் சொல்லிவரு வானோ
துக்கங்கள் தீர்ந்திடச் சுகத்தைத்தரு வானோ
என்னசெய் வேனென் றிராமனமு தானே
இப்புவியி லப்போது இன்பவனு மானே
கருணைபுரி சாமியை வணங்கியே நின்றான்

கண்டேன் தாய் ஜானகியைக் கண்டேனே யென்றான்
தாயா ருரைத்தசொல் சகலமுஞ் சொன்னான்
தயவாக வேசூடா மணியைக் கொடுத்தான்
மணிபெற்று ஸ்ரீராமர் மனமது மகிழ்ந்தார்
வாயுமக னனுமானை வாழ்த்திப் புகன்றார்
இலங்கைசென் றுதான்ய யழைத்திடுக மாலே
இன்பங் கொணர்ந்தவ னனு மந்தர்தோள் மேலே
படைத்தலைவ ருங்கூட முன்பின் நடந்தார்
பார்மீது சுக்ரீபர் வழிகாட்டிச் சென்றார்
திருமூர்த்தி யுருக்கொண்ட ஜெயராம பூபன்
ஜெகமெலா முண்டுமிழும் வேதப்ர தாபன்
பக்ஷமாய்த் தென்புரவைத் துறையதனைக் கண்டார்
பாலகவி யாங்கன்னி தாசனை யுகந்தார்
தீயவரை வதைத்துமகிழ் தேவர்களைக் காக்கத்
தென்கடற் றுறைவந்து சேர்ந்துதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-சீதாதேவிஜயம்.

சுந்தரகாண்டம்—முற்றிற்று.

உயுத்தகாண்டம்.

பதம்.

உலகமெல்லா மோரடியாய்-அளந்த
உபயபதம் போற்றிசெய்து
கலைகளெல்லாங் கொண்டாடும்-யுத்த
காண்டமதை யுரைத்திடுவேன்
நலமுடனே விஸ்வகர்ம்மா-முன்போல்
லங்கைநகர் தனைமுடித்தார்
அலைகடல்சூழ்புவிமீது-அந்த
ராவணனும் கண்டுகொண்டான்.

முடுகு.

அனுமரிடு தீயினால் மாண்டவர்கள் போக
அரக்கரொடு ராவணன் மிக்கசின மாக
மந்திரா லோசனை செய்தே முடித்தான்
மாயனை வெல்லவே யமைச்சர்கள் துடித்தார்
கெருடனைக் கொல்லவே கொசுகினைத் ததுபோல்
மூரட னிராவணன் மச்சாசின் மண்மேல்
கும்பகரு ணனதைத் தெரிந்துகோ பிப்பான்
கேளடா வண்ணேநீ யென்றேயு ரைப்பான்
சூத்தி லடிக்கவே பல்லுபோச் சென்ற
சொல்லைப்போல் துஷ்டர்சொற் கேட்கிறாய் நன்றாய்த்
தோட்ட மசோகவன மழிபட்ட போதே
தேவர்க்கு மூன்றுயரம் விட்டது கெடாதே
எனதன்னை சீதையை விட்டுநீ வணங்கு
இப்படி மகோதரன் சென்றானே யங்கு
வேணபடி கோபித்து இந்திர ஜயித்து
வெம்புபிரம் மாஸ்திரம் நாகபா சத்து
பலமகிமை வீண்போகு மோவென்ற தட்டிப்
படபடென வேயெழுந் தானேதுடை தட்டி
வம்புசொன் னாய்பயலே போடாநீ நாளை
வருகின்ற காரண மறியாயோ மேலே
என்றவனைத் தள்ளியே விபீஷண னெழுந்தான்
இராவணன் வதனத்தை நோக்கியே யுரைப்பான்
என்வார்த்தை கவனமாய்க் கேளடா வண்ணே
ஏகனுந் திரிமூர்த்தி யெவர்களும் நண்ணார்
தேவர்களைக் கர்த்திடுகெ வபயங்கொ டுத்தார்
தசரதன் புத்திரராய் வந்தே ஜனித்தார்
ஈரே ழுலகையு மீன்றருளு மாதா

எம்பிராட் டிகமல வைதேகி சீதா
உன்குலம் வேரோடு பட்டிடத் தானே
ஊரிலெம னாகவந் திருக்கிறாள் நானே
மூலவழி ராவணா சொன்னே னறிந்து
மூடனுங் கோபித்து வுள்ளஞ் சினந்து
என் பலம் அறியாயோ கேளடா தம்பி
ஈசனை மலையோ டெடுத்தே னெதும்பி
எலிவருக பூனையு மேங்கியோ டிடுமோ
இரவிமுன் பனிவந் தெதிர்த்துப்போ ரிடுமோ
இப்படி ராவணன் துள்ளித் துடித்தான்
எமனுக் காளா யிருந்தே படித்தான்
இன்றோடே யுன்னரசு போச்சுகுடி கேடா
இராமன் கரத்தினா லழிவாய்நீ மூடா
இன்னவகை சொல்லியே தமையனைத் துறந்தான்
இராகவ னிடம்வந்து சரணம் பணிந்தான்
தசரத விராகவன் றன்னக முவந்து
தம்பியாற் பாதுகை மகுடம் புனைந்து
இரவிமதி யுள்ளளவு மிலங்கைநகர் தானே
இந்தா விபீஷணா வென்றளித் தானே
என்றுஞ் சிரஞ்சீவி வரமுங் கொடுத்தார்
எல்லவரு மங்களங் கூட்டிக் களித்தார்
பாதக னிராவணன் பட்டணப் பெருமை
படைவீர ராக்ஷதர் காவலர்க ளொருமை
தசகண்ட பாவியின் குலமும் நிதானம்
தவப்பலமு மூலபல ராக்ஷதர் சகாயம்
எல்லாமுஞ் சிரஞ்சீவி வீடண னுரைத்தான்
எம்பிரான் கேட்டொரு திரணமென மதித்தான்
மணிவண்ண னுங்கடலைத் தாண்டிட நினைத்து

வருணமா மந்திரந் தன்னைச் செபித்து
விரிதர்ப்பை மேல்நின்று ஓரேழ் கடந்து
மிக்கபுய பலவருணன் வாரா தறிந்து
இதுசேதி தம்பியுட னோதிப் படித்தான்
எம்பிரான் பிரமாக்கினி வாளி பிடித்தான்
இதனைத் தெரிந்துளம் மிகநடு நடுங்கி
இராகவ னிடம்வந்தான் வருணன் வணங்கி
எம்பிரா னிராகவன் கோபந் தணிந்தான்
எடுத்தகணை ராக்ஷதர்கள் மேலே விடுத்தான்
இனிவருண னென்மீது அணைகட்டு வீர்க
ளென்னவே குரங்குபல வீராவு ளர்கள்
புவியிலுள மலையெலாம் வாரியே கொட்டிப்
புகழ்வாக மணியுதவு கடலிலணை கட்டித்
தந்தையிலுந் தானதிக வுன்னதம் விளங்கத்
தந்தாளனன் மூன்று நாளையி லிலங்க
ஒருநூறு யோசனை நீளமொடு துன்ன
ஒருபத்து யோசனை யகலமிது வென்ன
ஜெகமெலாம் புகழ்சேது பந்தனஞ் செய்தார்
தேவர்க ளெலாஞ்சீர் மலர்மாரி பெய்தார்
வளமான வணைகட்டு மாயவன் மகிழ்ந்தார்
மலையெனும் சுவேலையி லேறிப் புகுந்தான்
நளனாலே வீடமைத் தங்கேயிருக் கத்தான்
நல்லசுக சாரண ரரக்கனால் வந்தார்
கட்டிப் பிடித்தே விபீஷணன் காட்டக்
கார்முகில்வண்ண னுங்கண் டா ரரக்கனுயி ரோட்ட
இராவண னனுப்பவரு சுகசார ணனே
என்வார்த்தை கவனமாய்க் கேட்பீர்க ணீரே
திருவயோத் தியாளும் தசரதன் பாலர்

தீக்ஷண்ய முள்ளரா க்ஷத்தர்கள் குல காலர்
சொன்னதாய் நீங்களுஞ் சென்று சொல் வீர்கள்
திருடனொடு சத்தியமாய் மிக்கபுகல் வீர்காள்
சூத்ரக மாயமாய்ப் பின்வந்து நாய்போல்
சீதையை யெடுத்தவன் போனானே தேர்மேல்
பாவிதலை பத்தையும் பனங்காய்க ளென்னப்
பாரினி தறுத்துயான் போடுவேன் முன்னே
எமனுக்குத் துணையாக வந்தமு வர்களும்
அண்டையிலே வந்தாலு மிக்கயா வர்களும்
அவனோ டவன்பிள்ளை பேரன்மார் சேனை
அத்தனையு மேமனுல கேற்றிவிடு வேனே
நலமுட னிலங்கைமுடி சூடுவே னவர்க்கு
சாமிமுடி கொண்டுசுக சாரணர்கள் சென்று
தம்பிகனைத் சொன்னமொழி சென்றார்க ளன்று
கேட்டந்த ராவணன் துள்ளியே வெகுண்டான்
கீர்த்திபெறு புத்திமான் பாட்டனுங் கண்டான்
மூவரு மிராமனாய்ப் பூவுலகில் வந்தார்
தேவர்க ளெலாங்குரங் காகச் சமைந்தார்
வெள்ளம்வரு முன்னே யணைகொள்ள வேணும்
விபரீதம் வருமதை யுரைத்திதனே காணும்
சொந்தனும் பாட்டனா ரிப்படி யுரைக்கத்
துரோகியுங் கேளாது சொல்லுவான் மிக்க
சிறுமுள்ளு குத்தினர் பெருமலைகள் நோமோ
ஜெகமீது வாயிரம் வெள்ளமுஞ் சாமோ
இப்படி யுரைத்துத்தன் பாட்டனைத் தடுத்தா
னெங்குமகி ழந்தரக் கோபுர மடுத்தான்
ஏறிடவே சாரண ரின்பமேற் கொண்டு
எம்பிரான் சேனைக ளியாவையுங் கண்டு

அவனிவ னென்றுகை காட்டிக்காண் பித்தான்
அப்போ திராவணன் துள்ளிக் குதித்தான்
இதுசேதி விபீஷணன் சாமிக் குரைத்தான்
இடிபோலே சுக்ரீபன் சீறிக் குதித்தான்
இராவணன் பத்துமுடி மணியும் பறித்தான்
எம்பிரா னடிக்கமலம் வைத்தே பணிந்தான்
சுக்ரீபர் புயவலுமை சுவாமியு மகிழ்ந்தார்
சேனையோ டிராகவன் மறுநாள் நடந்தார்
பாதக னிராவணன் பட்டணம் வந்தார்
பாங்குட னிலங்கைநகர் சுற்றியே மூண்டார்
வடக்கினில் சுக்ரீபன் மேற்கினி லனுமான்
மகிழ்தெற்கு வாசலில் அங்கதன் கனவான்
சினமொடு கிழக்கினில் திணிநீல னுகச்
சுற்றியே வளைந்தா ரரக்கருயிர் போக
ஒவ்வொருவ ருக்கும்பதி னேழுவெள் ளந்தான்
ஓதும் படைத்தொகை யிருந்தார்கள் மெய்தான்
காய்கனிகள் கொண்டுவர ரெண்டுவெள் ளந்தான்
கடினமுட னையன் வகுத்தே பிரித்தான்
தம்பியுட னையன் வடக்கினி லிருந்தான்
ஜயமெனவே கோதண்ட வில்லைப் பிடித்தான்
முடிமணி யிழந்தரா வணன்தை யறிந்தான்
திடமுட னிலங்கையுள் ளேகாத்துக் கொண்டான்
சாமிவிடை யாலங்க தன்தூது சென்றான்
சண்டாள ராவணன் முன்னமே நின்றான்
இராமருட தூதுவ னங்கத னெனப்பேர்
ஜெயவாலி மைந்தனுன் சீசீ யெனைப்பார்
அடடாரா வணுவெளி யேபுறப் படடா
அல்லது சீதைதனை விட்டுநீ விடடா

நின்றங்கை சூர்ப்பனகி தனைமூளி யாக்கி
நீள்புவியிற் கரதூஷ ணாதிகளைப் போக்கி
வண்மையால் கடல்தூர்த்த நாளிலும் நீயோ
வாராத முட்டாளே யிப்போவரு வாயோ
உன்னாலே யாகாது சண்டையிட மூடா
ஓடிவந் தையனை வணங்குகுடி கேடா
அங்கத னகஞ்சீறி யிப்படிப் புகன்றான்
அதனா லிராவணன் கொல்லடா வென்றான்
அக்கணம் வாலிமக னையனிடம் வந்தான்
அரக்கனது சேதியைப் புகன்றே பணிந்தான்
கடலோடு கடல்வளைந் தாப்போல சண்டை
கைகலந்து கொள்ள வுருளுதே மண்டை
மலைவிட்டுச் சுக்ரீபன் சேனையோடு சென்றான்
வந்தவச் சிரமுஷ்டி யெமலோகஞ் சென்றான்
சிவரூப வனுமான் வெகுண்டுமலை தொட்டான்
சேனையொடு துன்முகப் பாவியுயிர் விட்டான்
தரணிபுக ழங்கதன் கையா லறைந்தான்
தளத்துடனே மாண்டுசுப நீசனவ னிறந்தான்
நீலனது கையாற் கிழக்குவாச லிற்றான்
நீண்டபடை யோடுபிர கஸ்தனும் பட்டான்
அதுதெரிய ராவணன் கோபம் புரிந்தான்
ஆயிரம் பரிதேரை வரவே யுரைத்தான்
வந்துவிளை யோனுட னமரே புரிந்தான்
மணிக்கவசந் தேர்படைகள் யாவும் துறந்தான்
அனுமனிட குத்தினா லங்கமிக நொந்தான்
அம்புகொண் டய்யனிடந் தேரேறி வந்தான்
நித்யகுண ராமர்கணை யாற்றோற்றுப் போகி
நிலங்கீறி நின்றானே ராவணத் துரோகி

என்னடா ராவணு விப்படித் துவண்டாய்
இனியுன்னு லாகாது சண்டையிடக் கண்டாய்
இன்றைக்குச் சென்றுநீ நாளைக்கு வாடா
இல்லையேல் சீதையை விட்டுநீ போடா
குகைபோல் பத்துவாய் தோன்றுதே பாவி
கூறுயோ வொருவார்த்தை கொடியகுண கோபி
உத்தமன் இன்னவாக்கை சொல்லவே திடித்து
ஊமைபோ லொன்றுஞ் சொல் லாமலே வெறுத்து
இராவணப் பயலவன் பாட்டனிடஞ் சென்றான்
இராமானு ஜன்புகழைப் பாடிமுன் னின்றான்
இதுசமையஞ் சீதையைச் சாமியிடம் விட்டு
எழிலடி வணங்குவா யின்றுமுதற் றொட்டு
எனதுகண் மணியே யிராவணு வென்று
இனிதுமா லியவான் புகன்றனே யன்று
அதுகேட் டிராவண னகமது மகிழ்ந்தா
னையனிடஞ் சீதையை விடவே துணிந்தான்
பக்ஷமாய்த் தேவாதி முனிவர்கள் மகிழ்ந்தார்
பாலகவி யாங்கன்னி தாசனை யுவந்தார்
இந்திர ஜெயித்துமுத லசுரரை வதைக்க
இலங்கைநகர் நாடியே வளைந்ததையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-சீதாதேவிஜயம்

பதம்.

கருணைவல்லி ஜானகியைவிட்டுக்
களிப்புறவேராவணனும்
தரணிமிசைத் துணிந்ததனை-பாவி
[illegible]டாளன் மகோதரனே

அரக்கனிட குலமதனை-வேரோ
டறுத்திடவே மனதிலெண்ணி
அரனவனைமலையுடனே-யெடுத்த
ராவணனைத் தடுத்துவிட்டான்.

முடுகு.

பலயுகந் தன்னையொரு நாளாக வெண்ணிப்
பார்மிசை பருத்தவன் தூங்குவா னெண்ணிக்
கும்பகரு ணனிடம் கிங்கரர் கூடிக்
கொடுமைபல செய்யவே யெழுந்தானே வாடி
பலகரியு மறுநூறு வண்டிசா தங்கள்
பதினாயி ரஞ்சாடி கள்ளுக் குடங்கள்
எப்பம்வர வுண்டு அரி வல்லமை புகன்று
இன்றோடே லங்கைகுடி விட்டுதோ வென்று
அண்ண னிராவண னண்டையிலே வந்தான்
ஐயனிடஞ் சீதையை விடவே மொழிந்தான்
இராவணன் கேளாத காரணத் தாலே
இராகவனைத் தேடிவந் தானேபுவி மேலே
சண்டைசெய ராகவன் தன்னம்பை யெய்தான்
சரணம் வணங்கிரா மஸ்மரணை செய்தான்
தயவாக ராகவ னொருபாணம் விட்டான்
தரணிமிசை யேகும்ப கருணனே பட்டான்
அப்பா லதன் தலையைக் கடலிலே தள்ளி
ஐயனிடம் வந்ததே பாணமது துள்ளி
இகமகிழு மெம்பிரான் படைகள் மகிழ்ந் துய்ந்தார்
இமையவ ரெலாமிக்க மலர்மாரி பெய்தார்
இராவணன் மறுத்தனன் மாயாஜனக னாகி
நல்லவே மகோதர னம்மனிட மேக
பின்னாக ராக்கத ராக்கியர் நெருங்கப்

பெற்றதாய் சீதையிடம் வந்தான் கலங்கக்
கண்ணேகண் மணியே காமரச மயிலே
பொன்னே நவமணியே மீனவையே குயிலே
இன்னமு மென்மீது ஏனிந்த மர்மம்
என்னையோ விப்பநீ செய்வதா தர்மம்
மன்மதன் கணையாலே மனம்நொந்து வந்தேன்
வைதேகி யேயுனது மலரடி பணிந்தேன்
கைசேர வென்னைநீ விட்டிடல் தகாதே
கண்ணேநீ யெனைக்கூடி முத்தமிடு மாதே
மாபாவி யிதுசொல்லி யழுதான் கரைந்து
வைதேகி செவியிரண்டு மூடியே சினந்து
அடடா இராவணப் பயலே திரும்பே •
யழியவோ வந்தா யஞ்ஞதித் திரும்பே
இராமரல் லால்மற்ற பேருக்கு நாவி
இராவணா வென்னடாநீ விடுகிறு யாவி
அக்கினியை ஈவந்து மொய்க்குமோ மூடா
அடியோடே சாகாதே யப்புறம் போடா
கற்புள்ள வைதேகி யிப்படி யுரைக்கக்
கலங்கியே ராவண னேவலால் மிக்க
மாயா ஜனகனும் மகோதரன் கொண்டு
மாதுமுன் னேயிருந் தானே திவண்டு
அப்பாவி மகளென்று சொல்லியே யழுதான்
அம்மன் பிதாவென்று அழுதாளே மெய்தான்
கும்பகர் ணன்மரணம் ராவண னறிந்தான்
கொடுமையொடு சொத்தைமர மென்னவே விழுந்தான்
அப்பாகும் பகர்ணா வுன்னைப் பிரிந்து
அவனியே லெப்படிப் பிழைப்பே னிருந்து
அகனொர் திராவண னழுது புரண்டான்

அதுகால மதிகாயன் படையுட னெழுந்தான்
ஐய னிராகவ னவன்வரவைக் கண்டான்
அன்பொடு விபீஷண னவன்கதை புகன்றான்
கொடுமையொடு முன்னமது கைடவர் விளிந்தார்
கும்பகரு ணன்றம்பி யதிகாயன் வந்தான்
உன்னு லெமதுகும்ப கர்ணனே பட்டான்
பின்னு லிவன்போகும் வழியென்ன வென்றான்
இளையபெரு மாளப்போ திவனையே சொல்ல
வென்னவே யரக்கர்படை யெமலோகஞ் செல்ல
இளையவன் றனைவிட்டுப் படைகளைக் கொன்றான்
இனிமுன்ன மதிகாயன் வேழம் விடுத்தான்
அனுமனடி யாற்கொடிய யானைபட் டிடவே
அதிகாயன் வந்தானே யமர்செய்து படவே
தம்பிமனஞ் சீறியே பாணம் பொழிந்தான்
சடலம் பதைத்ததி காய னிறந்தான்
இராவண னுடன்தான்ப மாலையழு தாளே
நலம்விட்டுக் குறைவிண்டு வீற்றிருந் தாளே
அப்பனிட சொல்லாலே யிந்திர ஜெயித்து
ஆக்கறித் தேரத மேறியே துடித்து
நாகபா சத்துடன் பிரம்மாஸ் திரமும்
நலமுடனே சேமரத மாயிரப் படையும்
கொண்டுபோ ரேறியொரு வெள்ளங் குரங்கைக்
கொன்றுவிட் டாக்கறித் தேமேலு மங்கே
ஆயிரங் கணையோட வனுமன் களைத்தான்
ஆண்மையுள்ள சுக்ரீபன் நீலனு விளைத்தான்
ஜாம்புவன் பனசனும் படைகளும் சாய்ந்தார்
தனிராமர் துதியாலே மூர்ச்சை தெளிந்தார்
சினமுட னெழுந்தவனு மான்மேலே கொண்டு

சிங்கமா யிரம்பூண்ட தேர்மேலே சென்று
வந்தலட் சுமணனு மிந்திரஜித்து வில்லை
வாங்கினார் சண்டையிலே யோங்கினார் தொல்லை
சூரபத் மனுஞ்சுப்ர மண்யருஞ் சண்டை
செய்கின்றாப் போலெங்கு முருளுதே மண்டை
ஆயிர மரக்கர்கள் ஆயிரந் தேர்மேல்
ஆச்சரித் தேரை யழித்தானே பார்மேல்
அரக்கர்படை நாற்பது வெள்ள மிறக்கக்
குரங்குநாற் பதுவெள்ள மப்படிப் பறக்க
மாய்கையால் இந்திர ஜெயித்தே மறைந்து
மாபாவி நாகபா சம்விடப் பயந்து
தம்பிமுத லானோர் களத்திற் படுத்தார்
சாமியொடு விபீஷணு மழுது துடித்தார்
அக்கணந் தனிற்கெருட பகவானே வந்தார்
அன்புள்ள சேனையொடு தம்பியு மெழுந்தார்
இன்பமுந் துன்பமு மனக்கவலை யுற்று
ஏகனாய் நிற்கின்ற ராமன் தெளிந்து
இளையோனை மார்போ டணைத்துக் களித்தான்
இதுசமயம் வந்தநீ யாரென வுரைத்தான்
உலகெலா முண்டுமிழு முன்றன் திராணி
ஒருவர்க்குந் தெரியுமோ கோதண்ட பாணி
பிரம்மாதி தேவர்களைப் பெற்றுக்காக் கிலையோ
தருமாதி பதவிகளைத் தந்துபார்க் கிலையோ
ஆதிநடு முடிவான பொருளேயிப் போது
மேதினியில் விளையாட வந்தவழி யீது
நல்லன்பர் பாசத்தை நீக்கிடும் ராமா
நாகபா சம்வெல்லப் பிரயாசை யாமா
கெருடன் துதித்துவிடை கொண்டுபின் சென்றார்

கொர்ச்சித்து வானராள் பூரித்து நின்றார்
தூதனு லிதுசேதி ராவண னறிந்தான்
துஷ்டப் படைத்தலைவர் வரவே யுரைத்தான்
அக்கினிக் கேதுமுதல் படைத்தலைவர் வந்தார்
ஐயனிட சேனையா லங்கன மடித்தார்
இக்கதை யிராவணன் மிக்கவே யறிந்து
இடியொத்த மகனிடம் வந்தான் கடிந்து
மக்க ளிறந்ததற் காகவருந் தாதே
மைந்தனுன் சென்றவரை வெல்வேன் விடாதே
என்றுசொல் லியிந்த்ர ஜித்தே யெழுந்தான்
இரண்டா முறையுத்தஞ் செய்யவே முனைந்தான்
இளையபெரு மாள்கண்டு பாணந்தொ டுக்க
வீனகாற் பதுவெள்ளம் வீரர்க ளிறக்க
இந்திர ஜெயித்துதன் மனமே துடித்தான்
எம்பிரா னிளையவன் வல்லமை படித்தான்
சூதாக வெல்வேனென வெண்ணிநகர் சென்றான்
துஷ்ட மகோதரன் கம்பனும் வந்தான்
கண்டவனு மந்தன்கோ பித்தே யெழுந்தான்
கைகண்டு கொண்டவரை மாட்டிடச் சினந்தான்
நூறுவெள் ளம்படையை நிமிஷத்திற் கொன்றான்.
நேரா யகம்பனே கஸ்தனூர் சென்றான்
இரவினில் மகோதரன் வெம்போர் புரிந்தான்
இளையவன் படையோடு திகைத்தே யிருந்தான்
பாவியிந் திரஜித்து பிர்ம்மகணை விட்டான்
பார்வீதி லிளையோனும் படையோடு மடிந்தான்
இராமரிங் குசீதை யங்குமழு திட்டார்
இராமானு ஜன்பதம் வானோர் துதித்தார்
சஞ்சீவி மலைகொண்டு அநுமந்தர் வந்தார்

தம்பிமுத லானோர் களம்விட் டெழுந்தார்
சாமிரா கவனுளமே மனமகிழ்ந்து நின்றார்
தாஷ்டீக வானவர்கள் கர்ச்சனை புரிந்தார்
இலங்கை வளைத்துங் கொளுத்திடக் கண்டான்
இராவணன் நொந்துதன் னுள்ள முடைந்தான்
அனுமானை யிந்திர ஜெயித்தே யெதிர்த்தான்
ஆக்கரித் தேகையிற் கூர்வா ளெடுத்தான்
சீதைபோ லேமாயா சீதையைக் காட்டிச்
சிந்தையவள் நொந்து பதைக்கவே யாட்டிக்
கொல்லுவே னுங்களை வெல்லுவே னென்றான்
கோபித் துடன்மாயா சீதையைக் கொன்றான்
நீச்ச னயோத்திக்கு மேல்போக்குக் காட்டி
நிகும்பலை யிற்சென் றொளித்தான்கா மாட்டி
அன்றுமுத லின்றுவரை பட்டதென் சொல்வேன்
ஆற்றிற் கரைத்தபுளி யாச்சுதென் செய்வேன்
அஞ்சனை புத்திர னழுதுமே சென்றான்
ஐயனொடு சங்கதிகள் யாவும் புகன்றான்
அறிந்தானே தன்வில் லெறிந்தானே மண்மேல்
அழுதானே தன்செய லமர்ந்தானே யென்மேல்
ஆரிருக் கின்றார்க ளென்னவே தம்பி
அழுதானே தேவர் கலங்கிடவே ததும்பி
வளப்பமெல் லாங்கண்டு வருகுவே னென்றான்
வண்டாகி விபீஷண னிலங்கைநகர் சென்றான்
கள்க்கமில் லாச்சீதை யம்மனிட நிலையும்
கபடன் நிகும்பலையிற் செய்தவப் பலனும்
கண்டுவந் தப்பன் களிப்புறப் புகன்றான்
களையா ரியாவரும் பூரித்து நின்றார்
எம்பிரா னிளையோனைத் தன்னிட மழைத்து
தனது வேள்விமுடி யாமுன் நடந்து

வென்றுவரு கயுத்தத் தந்திரம் புகன்றார்
மிக்கவிளை யோன்கேட்டுப் படையுடன் சென்றார்
கரிபுரி யரக்கரிட வுயிர்களைப் பறித்தார்
கபடன் நிகும்பலையில் வேள்வியைக் கலைத்தார்
துடைதட்டி யனுமா னெழுந்துகெர்ச் சித்தே
சொல்லாது சொல்லுவா னிந்திர ஜெயித்தே
அன்னைபோ லொருத்தியைக் கொன்றிட்ட சூதால்
அங்கத்தை யாற்றினி லலைக்கவெர் ணுந்தா
லக்ஷமண னுன்னுயிரைப் பக்ஷணஞ் செய்ய
நமனு யழைக்கிறுன் வாடாநீ யைய
என்னவே யிருபடையுஞ் சண்டையை விளைத்தார்
இளையோன்முன் னிந்திர சித்தே வளைத்தான்
அஸ்த்ரவரு ஷந்தம்பி மிக்கவே பொழிந்தான்
அதனு லரக்கனு முடலம் பதைத்தான்
சிற்றப்ப னைக்கண்டு வெகுவாக வைதான்
ஐயா விராவணு வென்னுலே சண்டை
யாகாது பேசவும் நோகுதே தொண்டை
இட்டியுன் தம்பியென் வேள்வியைத் தடுத்தான்
கோள்சொல்லி யேநமது குடியைக் கெடுத்தான்
ஒன்றுது முயிர்வந்து சண்டைக்கு வாரார்
கொண்டாடிப் பாடுகிறுர் என்பலம் பாரார்
என்னுலே யானமட் டுஞ்சண்டை செய்தேன்
இரவிமுன் விளக்கா யிருந்தென்ன செய்வேன்
ஆருமறி வார்களே யெனதுகை வில்லை
ஆண்டவன் காரியத்தில் வஞ்சனைக ளில்லை
அங்கேயான் போனுலே யிங்குவர மாட்டேன்
ஆதலாற் சீதையை விடுவாங் கேட்டேன்
மனநொந்து தன்மைந்த னிப்படி யுரைத்தான்
மாபாவி ராவணன் கேட்டுத் துடித்தான்

நாலா முறையுத்தஞ் செய்யவே முனைந்தான்
நமலோகஞ் செல்லவிளை யோன்முன் னெதிர்த்தான்
இளையவன் கணைவந்து பாய்ந்திடப் பதைத்தான்
இந்திர ஜெயித்துஉயிர் விட்டே யொழிந்தான்
தேவாதி தேவரும் மூவரு மகிழ்ந்தார்
சுகமாய்க் குரங்குப்படை யெல்லா மெழுந்தார்
அங்கத னரக்கனிட தலைதனைக் கொணர்ந்து
அய்யன் பதம்வைத்துத் தொழுதான் மகிழ்ந்து
இந்திர ஜெயித்துசுன இமையவரை வென்ற
இந்திர ஜெயித்தைக்கொன்று சென்றதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-சீதாதேவிஜயம்.

பதம்

மண்டலமேல் இந்திரஜித்தன்-மிக்க
மனம்நொந்து மாண்டிடவே
சண்டாள ராவணனும்-மண்டோ
தரியுமிகக் கேட்டழுதார்கள்
கண்டிதமாய்ச் சீதைதன்னை-வெட்டக்
கைதனிலே வாளெடுத்துக்
கொண்டுவந்த ராவணனும்-செல்லுங்
கொடுமையினை மகோதரனே

முடுகு

கண்டுநீ நில்லுபெண் பாவம்பொல்லாது
கண்டவர்களேசுவா ருன்னையும் விடாது
மூவாதி மூவரைச் ஜெயித்திட்ட வீரா
தேவாதி தேவரை வளைத்திட்ட சூரா
ஈரேழு லோகமும் ஆளுமதி காரா
ஈசனை மலையோ டெடுத்தவெம் பீரா

பெண்களை யெடுத்துநீ செல்வதே வீரம்
பேசரிய நமதுகுலங் கெட்டுதோ சாரம்
முட்டாளு முனைக்கூடக் காறியுமி ழாரோ
மூவுலகு பேசுவ துனக்குச்சரி தானோ
இப்படி மகோதரன் சொல்லியே தடுத்தான்
அப்படி யிராவணன் ஒப்புக் கொடுத்தான்
நரிமுகம் பரிமுகம் அரக்கர்பல பேர்கள்
அரிமுகம் புலிமுகம் அரக்கர்சில பேர்கள்
ஆனைமுகம் யாளிமுகம் ராக்ஷத ரனந்தர்
ஒருபத்து நானூறு ஒருகோடி வாயர்
இருபத்து நானூறு இருகோடி கையர்
அண்டங்கள் யாவையு மிடிக்குமதி சூரா
அற்பமாய் மலைகளை யெடுத்தெறியும் வீரா
பலவினைக ளெல்லா முருக்கொண்ட பழையோர்
பசியினாற் பசுவையு மறுத்துண்ணுங் கொலையோர்
அக்கினி ஜொலித்திடுங் கண்ணர் சினத்தோர்
தாயாரை யுங்கொல்லுந் தயையிலாக் கொடியோர்
தசரத விராமனால் தரணியில் மடிவோர்
அதிகபல மூலபலம் ஆயிரம் வெள்ளம்
அரக்கனொடு எஜமான் வன்னியும துள்ள
ஐயனிடம் ராவண னழைத்தே விடுத்தான்
அனுமன்முதல் ஜாம்புவனு மோடியே வளைத்தான்
பாடாது பாடியவ னவர்களைப் பிடித்தான்
மூலபல ராக்ஷத ரெதிர்த்துமுன் னின்றார்
ஞாலமிசை ராமனீ தெம்மாத்ர மென்றான்
கோதண்ட நாணேற்றிக் காதள விழுத்தான்
தேவாதி தேவர்கள் பயந்தே பொதுங்கச்
சேஷனும் பிரம்மித்து விழியே பிதுங்கத்
தானொருவ னின்றுசரக் கூடம் வகுத்தான்

தத்தளித் தோட வரக்கரை வளைத்தான்
எரிவாணஞ் சரிவாண மிந்தவா ணங்க
ளரிவாண மணல்வாண மருணவா ணங்கள்
இடிபாண முதலா யெடுத்தே விடுத்தான்
அடியோடு சாகவே யரக்கரை மடித்தான்
ஈனமுள பாவிக ளரக்கரிட கும்பு
எத்தனைகை யெத்தனைவில் லெத்தனைக ளம்பு
அத்தனையு மொருவனதை யெப்படித் தடுப்பான்
ஐயனவர் மேற்சண்டை யெப்படிக் கொடுப்பான்
எண்ணரிய சேனைக ளரக்கரொடு சண்டை
பண்ணிமுடி யாதெனவே யெண்ணியவர் மண்டை
எங்கெங்கணு முருளவே மந்திர முரைத்தார்
எம்பிரா னேமோக னஸ்திரம் விடுத்தார்
அங்கிங்கு மெங்கணும் ராமனாய் நின்றான்
அவர்களுக் கவர்தங்க ளால்சாகக் கொன்றான்
தனிராம னிவ்வகை யிருந்தே முகூர்த்தந்
தனிற்சொல்லு மூலபல வெள்ளம்யா வற்றும்
எங்கும் பிணங்களாய் ராக்ஷத ரிறக்க
எமதூத ருங்கொண்டு போனார் சலிக்க
ஆற்றுமண லளவிட்டுச் சொல்லலா மத்தை
ஆவிக ளிழிந்திட்ட கரிபரியி ரணத்தை
இவ்வளவு தொகையென்று சொல்லலா காதே
யெங்கணுந் தேர்கொடை முறிந்துவிட் டதே
காளிகள் கூளிகள் சுணங்குநரி பேய்கள்
கண்டுகூ டித்தின் னுந் தீர்க்குது விடாய்கள்
யுத்தகளம் வெற்றுக்கள மாகத் துடைத்தான்
ரத்தகள மென்னவே யரக்கரை மடித்தான்
மூலபல மிவ்வாறு பட்டபின் புற்றான்
மூட னிராவணன் போர்செய வெதிர்த்தான்

இளையோ னுடன்சேனை யாவரு மெதிர்த்தார்
இராவணப் பாவியாற் கீழே படுத்தார்
வெற்றிபெற் றேனென்று ராவணன் சென்றான்
விபரீத பாட்டனொடு தன்கதை புகன்றான்
சஞ்சீவி மலைகொண்டு அனுமா னழைத்தார்
தம்பிமுத லானோர் களத்திற் பிழைத்தார்
மூலபல வெள்ளம் படுங்களங் கண்டார்
முழுது மிராமனைத் துதித்தே மகிழ்ந்தார்
தூதரால் மூலபல மாண்டதை யுணர்ந்து
துரோகிமிகப் பொய்யென மதித்தே யெழுந்து
பாட்டனிடஞ் சென்றுதன் வல்லமை புகன்று
பாதக னிராவணன் துள்ளினா னன்று
முட்டாளே ராவணப் பாவிசண் டாளா
முழுது மிராகவன் வெற்றியைக் கேளாய்
இராமன் றனக்குநிக ராரொருவ ருண்டோ
இராவணா வென்மொழிக் கின்னமு மிரண்டோ
அடியோடே மூலபலம் மாண்டதே பாவி
அங்கங்கே யிராக்ஷதா ளழுகிறார் கூவி
தனிவேலை லொன்றதை விடுத்தேனே யென்றும்
தம்பிமுத லானோர் படுத்தார்க ளென்றும்
ஆக்கரித் திங்ஙனஞ் சொல்லவந் தாயே
அட்டாபாவி நிர்மூடா சண்டாளப் பேயே
அனுமான் மருந்தினா லனைவரு மெழுந்தார்
ஐயோ வுனைக்கொல்ல வெதிர்பார்த்து நின்றார்
சண்டைக்கு இன்னமும் போகாதே மூடா
செத்தவர்க ளுக்குத்தீர்ப் பணஞ்செய்ய விருடா
கடினமொடு பாட்டனிவ் வழி யுரைத்தான்
காலமுடி வாலதனைக் கேட்கா தெழுந்தான்
மூட னிராவணன் கோபுரத் தேறி

மூலபல மாண்டதைக் கண்டானே சீறி
காலமது முக்கோடி வயதுட னீசன்
கைவரவு மாண்டிட விராவணக் காதன்
மால்முன்னந் தந்தருள் வாக்கதா லங்கோர்
மதியுமது விதியுமதி லெனலால்துவாரர்
பாலனென முன்போல் வைகுந்த வாசன்
படிகொள்ள தேரே: துடிகொண்டு நீசன்
தப்பினவர் களில்நூறு வெள்ளம் பொறுக்கித்
தனிதூணி கவசமும் மேலே யிறுக்கிப்
பத்துமுடி கிரீடங்கள் முன்னவே தரித்துப்
பத்துவில் லையுமவன் பரிவா யெடுத்து
இருபது கையிலு மிலங்குவளை மாட்டி
இருபது காதிலுங் குழைகளைப் பூட்டி
இருபது கண்ணிலும் நெருப்புப்பொறி காட்டித்
தாளமத் தளமேளம் பேரிகை யடிக்கத்
தத்தளித் தண்டங்க ளெல்லாம் வெடிக்கச்
சினமிகக் கொள்வதென வேர்வை வடிக்கச்
சீதையொடு தன்னிடது கண்ணே துடிக்க
வருபெண் சாதியுட மதிமுகங் காண
மண்டோ தரியினிட மனமிகக் கோண
என்விந்தை யாவரும் பார்க்கவே யின்று
இருவகையில் யானேயொன் றாக்குவே னென்று
செத்ததன் சேனைகளை யெண்ணிமனம் நொந்து
தூபதீ பார்ச்சனை செய்துவலம் வந்து
பரியாயி ரங்கட்டித் தேரேறிக் கொண்டான்
பாவிமுன் பொல்லாத சகுனத்தைக் கண்டான்
இதுகண்ட வுத்தண்ட கோதண்ட ராமன்
எல்லவரு மீடேற வெண்ணியரு ளாளன்

சோதிமிகு நெற்றியினிற் றிருநாம மிட்டுத்
திகழும் பஞ்சுத்தூணி வலதுபுற மிட்டுக்
கடிதும்பை மாலையைப் புயமீது விட்டுக்
கச்சைமார் பினில்வச்ரக் கவசமே தொட்டுக்
குரோதமே செய்கின்ற இளநகை விடுத்துக்
கோதண்ட மதனையொரு கையினி லெடுத்துப்
பாதார விந்தத்தில் மிதியடி தொடுத்து
மாதா கொடுத்திட்ட மரவுரி யுடுத்திப்
பரிவுபெறக் கலகலெனப் பரிபுர மணிந்து
பல்லோர்கள் திருமணவ னென்றே மகிழ்ந்து
வீரப்பட் டந்திகழ விசாலமுள நெற்றி
நேராக் விட்டருள திகாரமுள கத்தி
ஒளிதிகழுந் தன்வலது புரமீது சுற்றி
ஒருவரும் ஒப்பிடுக வொண்ணாத வெற்றி
தேவர்கள் மடந்தையர் சோபனம் பாடச்
சீதை மனதில் நினைந்துகைகள் கூட
சித்தாதி முனிவர்கள் திருநடன மாடச்
சூரியன் தேரோட் டிலங்கையை நாட
யுத்தசன் னத்தனாய் ஸ்ரீராமர் வந்தார்
உம்பர்க ளெலாங்கூடி மலர்மாரி பெய்தார்
ஏசற்ற முதுமறையும் விதிநிலையு மேற
இமையவரு முனிவரருந் தவமுமீ டேறப்
பாவிக ளிராக்ஷதர்கள் படிமீது மாற
பக்ஷமா யாவருங் கண்கண்டு தேற
அவரவர்க ளேறிய பதவியி லேற
அரும்பாவி ராவணன் வைகுந்த மேற
மாதலி கொடுவந்த தேரேறி னானே
மாயவ னிராகவன் மனமகிழ்ந் தானே
இளையோனைக் கொன்றுவா வென்றே யரக்கன்

எவிட மகோதரன் வந்தானே கள்ளன்
ஐயனெதிர்த்தொரு பாணந் தொடுத்தான்
அதனால் மகோதரன் பட்டுயிர் விடுத்தான்
அனுகூல சத்ராதி யாகியே யிருந்து
அடியோடே ராவணன் குடியைக் கெடுத்துக்
காலனைப் போலவ னிலங்கையிற் புகுந்து
கழுவாய்க் கரைந்துகலக் கத்தொடு திரிந்து
வந்திடு மகோதரன் பெருவயிறு சரிந்து
மண்மேல் விழுந்ததை யிராவண னறிந்து
தத்தளித் தேயழுது சித்தந் துடித்தான்
தானுமக் கதியென்ன மனமது தெளிந்தான்
எமனுயர் நின்றிங்கே வாவென்று கூவ
எதிர்நின்ற ராகவன் வில்லம்பை யேவக்
காலமுடி வாலே யிராவண னெதிர்த்தான்
கண்ணனிவ னைக்கொல்லக் கனமென மதித்தான்
படியிலிரு வோரும்ரத மேறிக் கடிந்தார்
கடலுடனே கடல்வளைந் தாப்போல் வளைந்தார்
மண்ணிலுள் ளோரெலாங் கிடுகிடென் றோட
விண்ணிலுள் ளோரெலாம் விடவிடென் றோட
அண்டமுக டெல்லா மதிர்ந்தே வெடிக்க
ஆதிசே ஷன்சிரசு கோணியே நெளிக்க
ஒருவருக் கொருவர்கள் விருதுகள் படித்து
உலகங்கள் பதினாலு மதிரக்கொர்ச் சித்துக்
கனவில் லெடுத்துமிக நாணிப் பிகிந்தார்
கர்ச்சித்துச் சரமாரி வருஷித்துப் பெய்தார்
எங்கணு நெருப்புமழை யெனக்கணை பெய்தார்
இகபர மிரண்டையும் தெரியாது செய்தார்
வடதிசை முதற்கொண்டு நாற்றிசையுஞ் செல்வார்
கடலேழ் கடந்துசெய் வீரங்கள் செய்வார்

அண்டங்கள் யாவையுஞ் சுற்றியே போவார்
அம்புவியில் மறுபடியும் ஆக்ரமொடு மீள்வார்
கனவாயு வேகமோ மனோவேக மோதான்
கடினபோ ரிப்படிச் செய்தனர்கள் யார்தா
னென்றந்தத் தேவாதி தேவர்க ளொதுங்க
ஈனமுள ராக்ஷதர்க ளெல்லா மொடுங்கக்
கருணையரு ளுத்தண்ட கோதண்ட ராமன்
காதக னிராவண னுயிர்கொள்ளுங் காலன்
தானென்ன வேயதிக பாணந் தொடுத்தான்
சண்டாள ராவணன் தலைகளை யறுத்தான்
பத்துத்தலை முன்போல் முளைத்திட வெழுந்தான்
பாதக னிராவணன் சண்டையிட வந்தான்
ஐயன் விபீஷணனை நோக்கியே நின்றான்
அவனு முபாயத்தை மிகவே புகன்றான்
அய்ய னுணர்ந்துகோ தண்ட மெடுத்தான்
ஆகட்டு மென்று பிரம் மாஸ்திரம் விடுத்தான்
ரத்தினமணி மருமத்தி னிடையதனி லிட்டு
வைத்தவயிர் தகல சத்திலடி பட்டுப்
பத்துத்தலை ராவணன் கீழே விழுந்தான்
பாதக னிலங்கைநகர் விட்டே யொழிந்தான்
பக்ஷமாய்த் தேவாதி முனிவரும் சிறந்தார்
பாலகவி யாங்கன்னி தாசனை யுவந்தார்
பத்துத்தலை ராவணனைச் சம்மாரஞ் செய்து
பத்துத் திசை கொண்டாட வருகுதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ—ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ—சீதாதேவிஜயம்

பதம்.

சிருதனவன் விழச்சுவாமி—தேரில்
நின்றிறங்கி யிவன்முதுகில்
பெரியவடு வேமெனவே—வாய்வு
புத்திரனிடகுத்ததினுல்
வரும்வடுவ் ஈமெனவே—நல்ல
மனதுடையோன் விபீஷணனர்
உரைசெயவே ஸ்ரீராமர்-மிக்க
உள்ளமது மகிழ்ந்தனரே.

முடுகு.

மிக்கவும் விபீஷணன் தமையனே நினைந்து
விம்மிப் புரண்டழுது நொந்தா னிடிந்து
நல்லகுண ஜாம்புவன் தேற்றத் தெளிந்தான்
நாதனே நினைந்துமண் டோதரியு மழுதாள்
அரக்கருக் குக்கடன் விபீஷணன் செய்தான்
அய்யனு லிலங்கையபி ஷேகமுடி கொண்டான்
அம்மனிட மையன்ருள் பெற்றனுமன் வந்தான்
அரக்கன் விழுந்தசோ பனஞ்சொல்லிப் பணிந்தான்
பாவிக ளரக்கியரை யான்கொல்ல வேணும்
படிமே லெனக்கிது சோபனங் காணும்
அம்மனிது கேட்டே யகமுக மலர்ந்தாள்
அய்யன் பதத்தைத்திசை நோக்கிப் பணிந்தாள்
அனுமனேப் புகழ்ந்துவர மருளியே மகிழ்ந்தாள்
தாயான சீதையிடம் விபீஷணன் வந்தான்
சமயமிது சேவைக்கு நீவருக வென்றுன்
உலகமா தாவைச்சென்று தொழுது பணிந்தான்
உத்தமன் றன்மனது குறியினை யறிந்தான்
ஏழையடி யன்செய்த பிழைகளைச் சகிப்பாய்

என்றுதலை மேற்கரங் கூப்பிக் களிப்பாய்
இன்பமொடு முக்கால் வலம்வந்து தென்பால்
இகபரங் கொண்டாட வையனவன் முன்பாய்க்
குறைதீரச் சுவாமிபதம் மனதிற் பதித்தான்
கொழுனன் வளர்த்திட்ட தீயிற் குதித்தாள்
தனிமலர் கசங்காமல் வுண்டுமசை யாமல்
சந்தன மொடுங்கலவை ஈரமுல ராமல்
இந்த்ராணி சர்வாணி யாரணன் வாணீ
இனியமொழி யருந்ததியுங் கொண்டாட மேனி
தேவாதி தேவர்கள் சோபனம் பாடத்
துந்துமி முழக்கமொடு பூமலர்கள் போடப்
பாங்குடனே திருமேனி செழுமஞ்சள் மின்னப்
படிமீதி லெங்கணும் பளபள்ள வென்ன
மாதிரு மருக்கொழுந் தென்னவொளி யோங்கி
மகிழ்வாய்க் குளித்திட்ட செந்தணலை நீங்கி
யெழுந்தாளே யெனதன்னை பூங்கோதை சீதை
எல்லவரு மீடேறத் தள்ளினர் வாதை.
மாதாவை யேந்திட்ட வக்கினிபக வான்தான்
மாயவன் திருமுன்னே வைத்தே விழுந்தான்
வதெரு பொருட்களையுஞ் சுடுமெனது ஜென்மம்
என்னைச்சுட் டதுவிந்தப் பத்தினி தன்மம்
என்றனது வன்னைமேற் 'குற்றமிலை' யென்றான்
எம்பிரான் சாக்ஷிநீ யாவர்க்கு மென்றான்
மங்கள கரத்துடன் மாயவன் மகிழ்ந்தான்
மாதுசீ தையுமுன் மகிழ்ந்தே யிருந்தாள்
இராமாவென் னன்னைமிசை குற்றமிலை மெய்தா
னெனப்பிர்ம்ம தேவனும் தோத்திரஞ் செய்தான்
தேவரனு மதியாலே தசரதன் தேர்மேல்
தென்புடனே யேறிவர வந்தருளிப் பார்மேல்

கார்குழலி சீதைக்கு உபசரணை செய்தான்
கற்பகமே வாழியென வேவர மளித்தான்
மாயாபி ராமனை மார்பினிற் கட்டி
மனமது மகிழ்ந்துசொல் லமுதம் புகட்டி
மூலமே மோக்ஷமே கடாக்ஷமே யென்ன
முத்துமுத் தாடிமுன ஞ் சொல்லுவா. னின்னம்
மல்லிகை மிதிக்கினும் வருந்துமுன் னுளில்
வன்முள்ளு கற்பொரு தாமோவிந் நாளில்
கோள்சொல்லிக் கைகேசி நீக்கினுள் விதியா
லேழையர்கள் புதையலைக் கண்டெடுத் ததுபோல்
ஈனவந் தகனுக்குக் கண்கிடைத் ததுபோ
லெம்பிரா னய்யனே யின்றுன்னைக் கண்டேன்
எங்கனும் கொண்டாட வானந்தங் கொண்டேன்
அருந்ததியும் நிகரோ சீதைபெரு மைக்கு
ஆராய வேணுமோ யுனது ஒரு மைக்குத்
திருகுண்ட கண்ணுக்குத் தீங்குண்டோ மென்மேல்
தேவாதி தேவர்க்குஞ் சிறந்தேனே யுன்னுல்
தனிச்சக்ர வர்த்தியவ ரிவ்வகை பாடிச்
சத்திய லக்ஷ்மணனை யெடுத்துமுத் தாடி
முழுதுமிது தசரத னெழுந்தருளி முன்னே
முதுமறையில் யாவரு மெழுந்ததின் பின்னே
மடிந்தவசந் தனைக்கொண்டு வாவென விளம்பி
மாயனுக் யாபிக்க மாருதி கிளம்பி
ஏமனுறை மண்டலம் பிரம்மலோ கங்க
ளெங்குமொரு நிமிஷத்திற் றேடியே கொணர்ந்தான்
எம்பிரான் முன்னம் வசந்தனையே தந்தான்
மகிமையுள ராகவன் மனமது மகிழ்ந்தார்
வானரா திகளெல்லா மானிடர்க ளானுர்
இந்துமுக சீதையொடு செல்வரகு ராமன்

இலங்கைநகர் பெருமையைப் புகன்றுதவ மேமன்
அந்தந்த ராக்ஷதர்கள் பட்டவித முதலாய்
அய்ய னெடுத்ததை மொழிந்தருளி தென்பாய்
சுக்ரீபன் மாய்ந்திடுஞ் சுவேலமலை தனையும்
சுகமருளுஞ் சேதுபந் தனமோக்ஷ நிலையும்
திருவயோத் தியைவிட்டு வந்தநாள் தொட்டு
வரும்வழியி லடையாள மன்புமே யிட்டுப்
பக்ஷமிகு சீதையொடு சொல்லியே நடந்தார்
பரத்துவாசர் சாலையிற் படையொடு புகுந்தார்
அயோத்திதனிற் கௌசலை யம்மனுட னெவரும்
அழுதிடவே பரதரா ஜனுமழுது மிகவும்
பதினாலு வருஷமுஞ் சென்றுவரு வேனே
பரதனே யென்றுசொல்லிப் போனாரெங் கோனே
எனக்கவ ருரைத்தநா ளாச்சுதென் செய்வேன்
இனியெனை துயிரையான் வைப்பதிலை மெய்தான்
அக்கினி வளர்த்துவலஞ் சுற்றியே வந்தான்
அதுகாலம் ராமனு லனும னெழுந்தான்
வந்தா னிதோராமன் வந்தானே பரதா
தந்தா னிதோவாழி யிந்தாநீ பரதா
மூந்தாதே தீயினி லழுந்தாதே மணியே
வந்தே னிதோமாட வீதியில் துரையே
இன்னவகை சொல்லியருள் மோதிர மளித்தான்
இன்னமுங் கேளென மகிழ்ந்தே யுரைப்பான்
தீரமுல வியசித்ரக் கூடத்தின் முன்னே
திருவடிகள் நீகொண்டு சென்றதின் பின்னே
நடந்தகதை யாவும் விடாமற் புகன்றான்
நன்மையொடு பரதனு முணர்ந்தே களித்தான்
பரத்துவா சர்சாலையிற் படையுடன் பூர்வ

பகரரிய வமுதுண்ணும் வேளையினில் சார்வ
மொடுபதம் வணங்கியே ராகவனைக் கண்டான்
மூந்தியனு மந்தன் விளம்பியருள் கொண்டான்
பரதனைப் பார்த்ததுங் காத்தது முரைத்தான்
பரவாசு தேவனு மனமது களித்தான்
அய்யனே யுன்னுடவி பேசவு மென்னு
லாகாது தள்ளவும் போகாது வென்னக்
காதலனு மனுமானை வாழ்த்திப் புகழ்ந்தார்
கண்மணீ யென்னுட னுண்ணவா வென்றூர்
சீதையு மிளஞ்சிர னும்வான மீரசன்
திறமையுள லக்ஷ்மண னுடனேரகு ராமன்
பரத்துவாச ரிஷியருள் விருந்தமுதை யுண்டார்
பாரெலாங் கொண்டாட வானந்தங் கொண்டார்
பரத்துவாச முனிவர்முத லானரிஷி கட்கும்
படிமீது ராக்ஷசாள் மாண்டதை யவர்க்குந்
தெரிய மறக்காம லிராகவ னுரைத்தார்
சீலமுனி வர்களெலாங் கேட்டுக் களித்தார்
பரிவா யெனக்குரைத் திட்டநாட் கண்டேன்
இன்னமும் வரவில்லை யானென்ன செய்வேன்
இனியென்ற னுவியை மண்மீது வையேன்
பலவாறு சொல்லிக்குக னெருந்தழு தானே
படையுடனே ராமனவன் முன்னஞ்சென் றூனே
உத்தமக் குகனவனும் வந்து பணிந்தார்
ஒருவருக் கொருவருற வாடியே மகிழ்ந்தார்
துய்யகுக னுஞ்சனகி வீடணனு மெய்யன்
சுக்ரீப துணைவ ருட னேயென் னையன்
சிந்தைமகிழ் வாகிப்புஷ் பங்கள்மல ரயோத்தி
சேரமுன் னமேநல்ல மெஞ்ஞான மூர்த்தி

வதிஷ்டனும் பலபேர்க ளுடனேதாய் மாரும்
மனமகிழப் பரதனுக்கு வந்துவனு மாரும்
வந்தா னிதோவய்ய னென்றுகாண் பிக்க
மன்னவ ரெலாங்கண்டு சேவிக்க மிக்க
வானவர்க் கமுதம் வழங்கினுப் போல
மனிதர்க் கெலாம்பொன் பொருள் வந்தாப் போல
பக்ஷமுட னனந்தக் காக்ஷிதந் தானே
பரதன்முன் சீதாபி ராமன்வந் தானே
மிடியருக் கனகமழை கிடைத்ததுபோல
மிக்கவும் பரதனொடு யாவர்களு மண்மேல்
சீதாபி ராமனைத் துதித்தே பணிந்தார்
சிந்தைதனி லானந்த மாகியே புகழ்ந்தார்
அன்புடன் மிக்கசத் துருக்கன் பணிந்தான்
அன்னையர்கள் மூவரும் வாழ்த்தியே மகிழ்ந்தார்
அவரவர்கள் வேதவிதி யாகப் பணிந்தார்
அம்புவி யெலாமிக்க வகமே மலர்ந்தார்
சுமந்திரன் சொல்லாலே யாவருங் கூடிச்
சுபலக்ஷணமாக மங்களம் பாடி
வைகுண்ட மென்றிடு மயோத்திநக ரெங்கும்
மங்கள வலங்கிருதஞ் செய்தார் முழங்கும்
முப்பத் திரண்டுவகை வாத்திய மொலித்தார்
மூவரும் தேவரும் யாவரு மதித்தார்
பணிராம சாமிக் கபிஷேகஞ் செய்தார்
பரதவாழ் வான்மிக்க வெவர்களு முய்ந்தார்
துங்கநவ மணிகளா லுச்சிதங்க ளாகச்
சுபமங்க ளானந்த மொடுதெய்வ லோக
விஸ்வகர்ம் மாவினல் மண்டப மமைத்தார்
வேந்தர்க ளெலாம்வநது பணியவே களித்தார்

மாம்பனையோ வேதப் பவ்யமோ வென்னப்
பாங்கொடு புவிக்குக் கண்ணாடிபோல் மின்னச்
செய்தமண் டபப்பெருமை தேவரு மகிழ்ந்தார்
தேவாதி ராஜனும் மகிழ்ந்தே துதித்தான்
சீதைரா மனுமலங் கிருத மணிந்தார்
ஜெகமெல்லா மெங்குந் துதித்திடச் சிறந்தார்
முப்பத்து முக்கோடி தேவர்மலர் போட
மூவுலகு முள்ளளவு முவந்ததொழு தாட
நாற்பத்தெண் ணாயிரம் ரிஷிகள்மறை பாட
நல்லரம் பாஸ்திரீகள் நடனங்க ளாடச்
சல்லரி யுடுக்கைமணி டவுன்முரசு சின்னஞ்
சங்குமல் லரிகுமுர வாசுகியங் துன்னத்
தாளமத் தளம்பேரி நாகசுர மேளம்
தம்பூரி டல்வீணை பம்பையெக் காளம்
வாத்தியமுப் பத்திரண்டு மாறு தொலிக்க
மண்ணாடர் விண்ணாட ரெவருந் துதிக்கச்
சித்ரமணி மண்டப மதனிலுளங் கொண்டு
தேவரு மனிதருந் துதிசேவை கொண்டு
சுக்ரீபர் வீடணன் குகன்முதற் கொண்டு
சத்யமும் நீதியும் பெருமையுங் கொண்டு
சகலமுங் கைக்கொண்டு செங்கோலுங் கொண்டு
பத்தினி ஜானகி யுடனுலகை யாளும்
படிகொண்டு மகுடமுடி கொண்டானே நாளும்
ரகுராம ஜெயராம சீதாபி ராமன்
நரபதி சுரபதி பரபதி பூபன்
பசுவுடன் வேங்கையுங் கூடிவிளை யாடப்
பாம்புட னிழலிலே கீரியிருந் தாட
நேமமாய் மந்திரிபிர தானியிருந் தய்ய

ஸ்ரீமத் இராமாயண ஓடம்

நித்யமு மனுநீதி கொண்டரசு செய்ய
எங்கணு மாதமும் மாரியது பெய்ய
இகபரந் தனிலுள்ள பேறெலா மெய்ய
மீட்சிசெய் சீதா சமேதனு யோங்கிக்
காட்சிதரும் ராகவன் தாட்சியில் லாமல்
தனதான்ய சகலசம் பத்தும் பெருகிக்
கனமா வயோத்தியர சாட்சிசெய் திருந்தான்
இரவிகுலம் வாழிசீ தா ராமர் வாழி
இளையவர்கள் மூவரு மிவர்பெண்டிர் வாழி
குருவாம் வதிஷ்டருஞ் சுமந்திரரும் வாழி
சிரஞ்சீவி யனுமந்தன் மென்மேலும் வாழி
திவ்வியகலை கவிவாணர் பெரியோரும் வாழி
படிவாழி மறைவாழி மும்மூர்த்தி வாழி
பலவமரர் முனிவர்பசு மதிகதிர்கள் வாழி
திருவளருங் கினியாரும் நகரமுறை கன்னி
தாசனுரை யேலபதம் பாடினரும் வாழி
உலகங்கள் பதினாலும் வாழிவா ழியவே
உல்லாச சல்லாப மோங்கிவா ழியவே
திவ்பராமாயணம் ஏலபதம் பாடித்
திருவயோத் தியில்வந்து சேர்ந்துதையா கப்பல்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-ஸ்ரீராமஜெயம்
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ-சீதாதேவிஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண ஓடம்
முற்றுப்பெற்றது.

மின்சா[illegible] மாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயக[illegible] மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்[illegible] தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். [illegible]யத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்பு[illegible] என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க [illegible]ருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது! துப்பறியும்!! நாவல்!!!

வெளியாய் விட்டது.

மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந்தர வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கு [illegible] மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தியளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களுண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அ[illegible]ம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளிவரும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங்கொண்டது. வருஷ சந்தா ரூபா 2—8—0 இரண்டரைதான். வெளி நாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922௵ பிப்ரவரி௴ 1௳ வெளியாகும். அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி முதல் சஞ்சிகையை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

"ஆனந்த நிலயம்" நெ, 6, வெங்கடேசமேஸ்திரி வீதி, சென்னை.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915வது ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் [illegible]ன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், [illegible]து நாட்டாருடைய இவ்வள[illegible] ஆசார ஒழுக்கங்களின் [illegible]த்தத்தையும், ஆன்மார்த்த ஞானவிர்த்தியையும் பொ[illegible]வியையும் நோக்கமாய்க் [illegible] இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையும் [illegible] மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி துப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்க[illegible] இது நமது நாட்டாரது நன்மையொன்றையே [illegible] பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்கு தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	3	8	தினகரசுந்தரி	1	0
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
தேவசுந்தரி ...	1	4	வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் (மறுபதிப்பில்)			ஆனந்தசிங் (மறுபதிப்பில்)		
சுவர்ணம்பாள் ...	0	12	பவளத்தீவு-அச்சில்		
கமலசேகரன் ...	1	4	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	மின்சாரமாயவன் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	குணசுந்தரன் ...	0	8
			சகோதரவாஞ்சை	0	6
			ஷை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம் : மானேஜர். "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.